கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளைச் சரியாகக் கொடுப்பவர்கள்.

எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள். ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

S. M. Fernando
OPTICIANS
Sight Tested Prescriptions Accurately Dispensed.
580, Hospital Road,
Near Bank of Ceylon,
Jaffna.

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 28 புதன்கிழமை (11-03-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 105

# புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு நிபந்தனைகளை அரசு தளர்த்தும்

## இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் சென்னையில் வைத்துத் தகவல்

சென்னை, மார்ச் 11

இனப்பிரச்சினை சம்பந்தமாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்குரிய நிபந்தனைகள் தளர்த்தப்படும்.

விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பின்றி, ஈழத் தமிழர் பிரச்சினைக்கு எந்தத் தீர்வையும் காண முடியாது.

இவ்வாறு இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதுவர் திரு. நெவில் கனகரத்தினா சென்னையில் வைத்து பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

அண்மையில் புதுடில்லியிலிருந்து சென்னை வந்த போது அவர் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப்போது அவர் மேலும் கூறியதாவது:-

ஒரு நாட்டில் பிரச்சினை ஒன்று நீண்ட காலமாகத் தொடர்வது அந்த நாட்டு அரசாங்கத்திற்கு நல்லதல்ல.

அதனால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை அரசாங்கம் பல முறைகள் பேச்சு நடத்தியது. ஆனால் உரிய பலன் கிடைக்கவில்லை. ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமானால் விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் அது முடியாது.

[6ஆம் பக்கம் பார்க்க]

## திருமலையில் ராணுவம் சூடு! மூன்று தமிழர் உயிரிழப்பு!!

யாழ்ப்பாணம், மார்ச் 11

கடந்த சனியன்று மணலாறு மாவட்டத்தில் இருந்து, திருகோணமலை மல்லிகைத்தீவுக்குச் சென்றுகொண்டிருந்த பொதுமக்கள் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். படையினரின் சூட்டுக்கு இலக்காகி மூன்று தமிழர் உயிரிழந்தனர்.

காளியப்பு சௌந்தரராஜா [35 வயது], பேரின்பராஜா ரவி [25 வயது], குட்டியான் [25 வயது] ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். இவர்களின் சடலங்களை படையினர் பச்சைனூர் முகாமுக்கு எடுத்துச் சென்றனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சம்பூர் இராணுவத்தினர் சண்முகம் தங்கேஸ்வரன் [22 வயது] என்பவரைக் கைது செய்து முகாம் கொண்டு சென்றனர் என்று மற்றொரு செய்தி தெரிவித்தது. [உ-3]

## பூநகரியில் நேற்று சிப்பாய் மரணம்!

### ஆயுதங்களும் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

பூநகரி — மட்டுவில்நாடு பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்று அதிகாலை 5.30 மணியளவில் புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

தாக்குதலில் கொல்லப்பட்ட சிப்பாய் ஒருவரின் சடலத்தையும் ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். தாக்குதலில் தப்பிய மற்றைய சிப்பாய்கள் பின்வாங்கி முகாமுக்குத் ஓடினர்.

அப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த ஸ்ரீலங்காப் படையினரின் காவல் அரணில் இருந்து சுமார் 300 யார் தூரத்தில்— உதவி அரச அதிபர் அலுவலகக் கட்டடத்தில்— கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

படையினரிடம் இருந்து ரி 56 ரகத் துப்பாக்கி - ஒன்று, அதற்குரிய ரவைக்கூடுகள்— நான்கு, நடுத்தர ரவைகள்— 110 ஆகியன புலிகளால் கைப்பற்றப்பட்டன. [உ-3]

## தென்பகுதி கிறிஸ்தவ குழு மீண்டும் இன்று வருகிறது

தென் இலங்கையில் இருந்து கிறிஸ்தவ சபைகளைச் சேர்ந்த — ஐந்து பேர் அடங்கிய — தூதுக்குழு ஒன்று மீண்டும் இன்று யாழ்ப்பாணம் வரவிருக்கிறது.

கொழும்பில் இருந்து இன்று காலை புறப்படும் இந்த தூதுக் குழுவில் மெதடிஸ்த சபை, கத்தோலிக்கத் திருச்சபை ஆகியவற்றைச் சேர்ந்த குருவானவர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தத் தூதுக்குழு மெதடிஸ்த சபையின் முன்னாள் தலைவர் வண. சோமா பெரேரா தலைமையில் வரவிருந்தது. ஆனால் வண. சோமா பெரேரா இம்முறை வரவில்லை என்று நேற்று இறுதி நேரத்தில் தகவல் கிடைத்தது.

பிரஸ்தாப குழுவினர் இன்றிரவு இங்கு வந்து சேர்வர். என்றும்—

நாளை புலிகளுடன் பேச்சு நடத்துவர் என்றும் எதிர் பார்க்கப்பட்டது. [ஒ-3]

### துப்பாக்கிகள் கண்டுபிடிப்பு

எம்பிலிப்பிட்டியா பொலிஸார் கடந்தவாரம் தானியங்கி ஆயுதங்கள் சிலவற்றையும் ரவைகளையும் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவற்றில் ஒரு தானியங்கித் துப்பாக்கி, ஒரு ரி - 56 ரக துப்பாக்கி, 303 ரைபிள் ஒன்று, ஒரு சப் - மெஷின் துப்பாக்கி, ஒரு 12 துளை ஷொட்கன் ஆகியன அடங்கும். (ஒ-எ)

## ராஜீவ் கொலை வழக்கு :

## குற்றப் பத்திரிகையைத் தயாரிப்பதில் இந்திய அதிகாரிகள் திண்டாட்டம்

சென்னை, மார்ச் 11

ராஜீவ் கொலை தொடர்பான குற்றப் பத்திரிகையில் விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன், விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான் ஆகியோரின் பெயர்களைச் சேர்ப்பதா அல்லது இல்லையா என்பது குறித்து திட்டவட்டமான முடிவுக்கு வர முடியாத நிலையில் இந்திய புலனாய்வுக் குழுவினர் திண்டாடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இருவருக்கும் எதிராக வாய்மூலச் சாட்சியங்களே இருக்கின்றன என்றும் எழுத்து மூல ஆவணங்கள் எதுவும் கிடையாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தனியாக வாய்மூலச் சாட்சியங்களை மட்டும் வைத்துக் கொண்டு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வது விசாரணையின் போது பலன் எதனையும் தரமாட்டாது என்று புலனாய்வுக் குழுவுடன் நெருங்கிய வட்டாரங்கள்

[6ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளைத் தடை செய்வது குறித்து இந்திய மத்திய அரசு பரிசீலனை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது தடை விதிப்பது குறித்து இந்திய மத்திய அரசு பரிசீலித்து வருகின்றது.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் இத் தகவலை நேற்று ராஜ்ய சபையில் வெளியிட்டார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யும் யோசனை இந்திய மத்திய அமைச்சரவையின் அரசியல் விவகாரக் குழுவின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் என்றார் சவான்.

ராஜீவ் காந்தியின் படுகொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்றும்—

அதனால் அந்த இயக்கத்தின் மீது உடனடியாகத் தடை விதிக்கப்பட வேண்டும் என்றும் கேள்வி நேரத்தின்போது பல எம்.பி.கள் வலியுறுத்தினர். அதற்குப் பதிலளித்த போதே அமைச்சர் சவான் இப்படித் தெரிவித்தார்.

## ஈழப் போராளிகள் அனைவரையும் விடுவித்து தாயகம் அனுப்புங்கள்!

### பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் கோரிக்கை

சென்னை, மார்ச் 11

''தமிழகத்தில் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஈழப் போராளிகள் குழுக்களைச் சேர்ந்த அனைவரையும் விடுதலை செய்து, அவர்களின் தாயகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.''

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் இவ்வாறு கோரியிருக்கிறார். அண்மையில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த போதே அவர் இக் கோரிக்கையை விடுத்தார்.

தமிழகத்தைப் பொறுத்த வரை — யாரும் தமிழக அரசுக்கோ அல்லது மத்திய அரசுக்கோ எதிராக ஆயுதம் ஏந்திப் போராடவில்லை. இந்த நிலையில் அரசியல் நோக்கத்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## உயர்தர பரீட்சை நடத்தக் கோரி மாணவர்கள் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி

ஜி.சீ.ஈ. [உயர்தர] விசேட பரீட்சையை முன்னர் அறிவித்தபடி ஏப்ரல் இரண்டாம் திகதி நடத்த வேண்டும் என்று கோரி, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இன்று ஆர்ப்பாட்டச் சைக்கிள் பேரணி ஒன்றையும், பொதுக் கூட்டம் ஒன்றையும் நடத்தவிருக்கிறது.

இன்று காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் பொதுக் கூட்டமும் அதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டச் சைக்கிள் பேரணியும் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பேரணி யாழ். செயலகம் வரை செல்லும். ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்ட மகஜர் ஒன்று அங்கு வைத்து யாழ். அரச அதிபரிடம் ஒப்படைக்கப்படும்.

பொதுக் கூட்டத்திலும் ஆர்ப்பாட்டப் பேரணியிலும் பெரும் எண்ணிக்கையான பாடசாலை மாணவர்கள் பங்குபற்றுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

## கல்லில் வைத்துக் குத்தியபோது மர்மப் பொருள் வெடித்தது! இளைஞர் கை இழந்தார்!!

யாழ்ப்பாணம், மார்ச் 11

மாடு மேய்த்துக்கொண்டிருந்த இருவர் வயலில் கண்டெடுத்த இனம் தெரியாத பொருள் ஒன்றைக் கல்லில் வைத்துக் குத்தியபோது அது வெடித்தது. அதனால் ஒருவர் வலது கையை இழந்தார்; மற்றவர் காயமுற்றார்.

மாதகலில் நேற்று மதியம் 11 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

உரும்பராயைச் சேர்ந்த செல்வன் சுதன் [வயது 16] என்ற இளைஞரே கையை இழந்தவராவார். விளானைச் சேர்ந்த நன்னித்தம்பி சிவசுதன் [வயது 22] காயமடைந்தார்.

இவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [உ-15]

## பலாலிக்கு மாதம் தோறும் செஞ்சிலுவையினர் செல்வர்

யாழ்ப்பாணம், மார்ச் 11

பலாலி முகாமில் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நலன்களைக் கவனிக்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் இம்மாத இறுதியில் மீண்டும் அங்கு செல்லவிருக்கின்றனர்.

தடுத்து வைக்கப்பட்டோருக்கு அவர்களது உறவினர்கள் எழுதிய கடிதங்களையும் செஞ்சிலுவை அதிகாரிகள் எடுத்துச் செல்வர்.

தடுத்து வைக்கப்பட்டோரைப் பார்வையிட செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் மாதம் ஒரு தடவை பலாலி முகாமுக்குச் செல்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## போராளிகள் நுழையலாம் தமிழகத்தில் எச்சரிக்கை

சென்னை, மார்ச் 11

தமிழகத்திற்குள் ஈழப் போராளிகள் நுழையக்கூடும் என்று தகவல் கிடைத்துள்ளதாம். இதனையடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தமிழகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான எச்சரிக்கை அறிவிப்பு ஒன்றை மாநில அரசு கடந்த சனியன்று தமிழக மக்களுக்கு விடுத்தது.

கடற்கரைக் கிராமங்களில் வாகனங்கள் சோதனையிடப்படுகின்றன என்றும் கடற்கரைப்பகுதிகளில் பொலீஸாரின் ரோந்தும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## கையில் சயனைட்டுடன் சிகிச்சை பெறும் பிரமுகர்!

### ஹொனேக்கரின் இன்றைய நிலை

பொன், மார்ச் 11

முன்னாள் கிழக்கு ஜேர்மனியின் ஜனாதிபதி எரிக் ஹொனேக்கர் தனது கையில் சயனைட் நஞ்சு கலந்த மாத்திரை ஒன்றை வைத்துக் கொண்டே ரஷ்யத்தலை நகர் மாஸ்கோவில் உள்ள மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

தனது விருப்பத்திற்கு மாறாக பலவந்தமாக தம்மை ரஷ்ய அரசு ஜேர்மனிக்கு நாடு கடத்துமானால், அதனைத் தவிர்க்க சயனைட் மாத்திரையை உட்கொண்டு தற்கொலை செய்து கொள்வதே ஹொனேக்கரின் நோக்கம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவல்களை ஜேர்மன் தினசரி ஒன்று நேற்று வெளியிட்டது.

நீதி விசாரணை நடத்துவ

[6ஆம் பக்கம் பார்க்க]

## மெய்ப்பாதுகாவலரிடமே பணத்தை இழந்த எம். பி.!

கொழும்பு, மார்ச் 11

யாழ். மாவட்ட எம். பி. திரு. கே. ஸ்ரீநிவாசனிடமிருந்து ஐந்து லட்சம் ரூபா பணத்தை அபகரித்தவர் அவரது மெய்ப்பாதுகாவலரும் சாரதியுமாக பணியாற்றியவரே என்று பொலீஸார் தெரிவித்தனர்.

மேற்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டதுடன் அவரால் அபகரிக்கப்பட்ட பணத்தில் ஒரு பகுதியும் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவதினம் எம். பியையும் வேறு இருவரையும் எம். பி. யின் காரில் கொண்டு சென்று அமைச்சு அலுவலகம் ஒன்றில் இறக்கிவிட்டு, எம். பிக்கள் தங்கும் சிராவஸ்தி விடுதிக்கு சந்தேக நபர் திரும்பினார் என்றும் —

அங்கு எம். பியின் கதவைத் திறந்து அவரின் பணத்தை எடுத்துக் கொண்டு மாயமானார் என்றும் தெரிவிக்கப்பட்டது [உ-எ]

## முச்சந்தி முரளி



அப்பா... பொய்ப்பாதுகாவலர் எண்டு சொல்லுங்கோ...!

## ஆவரங்காலில் நேற்று மாலை அவலம்

## அகதி முகாம் கொட்டகைகள் தீப்பற்றி எரிந்து நாசமாகின!

### வயோதிப மாது பலி; மூவர் காயம்; உடைமைகள் அழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 11

ஆவரங்காலில் அகதி முகாம் ஒன்றின் மூன்று கொட்டகைகள் நேற்று மாலை திடீரெனத் தீப்பிடித்து எரிந்து நாசமாகின; தீ விபத்தில் சிக்கி வயோதிப மாது ஒருவர் உயிரிழந்தார்; மூன்று பெண்கள் தீக்காயங்களுக்கு உள்ளாகினர்; அகதிகள் உடைமைகள் முற்றாக அழிந்து போயின.

ஒவ்வொன்றும் சுமார் 60 அடி நீளமுடைய மூன்று கொட்டகைகளே முற்றாக நாசமாகின. அவற்றில் தங்கியிருந்த 36 குடும்பங்களின் உடைமைகள் சாம்பராயின.

ஆவரங்கால் மணற்றரைப் பகுதியில் நேற்றுமாலை 5 மணியளவில் இந்த அவலச் சம்பவம் நிகழ்ந்தது.

வள்ளாய், கதிர்ப்பாய், ... இடம்பெயர்ந்து வந்த ...

[6ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய Panasonic Video Camera விற்பனைக்கு உண்டு. Model M8000 [MS| Model மாதிரி] Complete Set தி. சிவநாதன் [மாஸ்ரர்] மூத்த விநாயகர் கோவிலடி, கரணவாய் தெற்கு, கரவெட்டி. [19952]

### விற்பனையாகிறது

கிராம சேவையாளர் பதவிக்கான விண்ணப்பப் படிவம் விற்பனையாகிறது. தினேஸ் புத்தகசாலை, 19, பஸ் நிலைய முன்பாக யாழ்ப்பாணம். [20026]

### தவறிவிட்டது

திருநெல்வேலிக்கும், மருதனார்மடத்துக்கும் இடையில் 8-3-92 அன்று கைச் சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் [சீமாட்டி, 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் அல்லது மங்கை சில்க், சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைக்குமாறு வேண்டுகிறோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [4517]

5-3-92 இல் ஆரியகுளம் சந்திக்கும், இராசாவின் தோட்டம் சந்திக்கும் இடையில் பொலித்தீன் உறையினுள் வைக்கப்பட்டிருந்த அடையாள அட்டை, ஆணின் புகைப்படம் மற்றும் முக்கிய தஸ்தாவேஜுகளும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் விரைவில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். சோ. மகேந்திரராணி, (இராசன் கடையடி) உரும்பராய் தெற்கு, உரும்பராய். [19980]

சிவராத்திரி தினத்தன்று 712620692V இலக்கமுடைய அடையாள அட்டை கன்னாதிட்டி வீதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் நா. சச்சிதானந்தன், New Science Hall, கன்னாதிட்டி வீதி, பெருமாள் கோவிலடி என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். [20030]

### தட்டெழுத்தாளர் தேவை

தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் அனுபவமுள்ள தட்டெழுத்தாளர் தேவை. புதன்கிழமை காலை 10 மணிக்கு சமுகமளிக்கவும். அறிவகம் புத்தகசாலை, 374, வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம். [சி-1657]

### மணமகன் தேவை

யாழ் இந்துப் பெற்றோர் 34 வயது, அத்த நட்சத்திர, 8 இல் செவ்வாயுள்ள வங்கிச் சட்ட உத்தியோகத்தரான மணப்பெண்ணுக்கு பொருத்தமான மணமகனைத் தேடுகின்றனர். சாதகக் குறிப்புப் பிரதி, ஏனைய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல 836, மே. பா உதயன். [4519]

### இலவச திருமண சேவை

வயது 35, அவிட்டம், செவ் 4, பிரான்ஸில் பிரசா உரிமையுடன் பணி புரிபவருக்கு மணமகள் தேவை இலங்கை வந்து திருமணம் செய்யலாம் மணமக்கள் உள்ளனர். தொடர்பு: ஞாயிறு காலையில் து. விமலா நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4523]

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கில (Stencils) ரைப்பிங் வேலைகள் செய்து கொடுக்கப்படும். பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 3 ஆம் ஒழுங்கை, கிளை பிரதான வீதி, சங்கானை. [சி-1629]

### வெளிவந்து விட்டன

ஏப்ரலில் நடைபெறவுள்ள 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்துவதற்கான புதிய முறையிலான துரித மீட்டல் பயிற்சிகள், கணிதம் 5 வினாத்தாள்கள், தமிழ் 5 வினாத்தாள்கள் விற்பனையாகின்றன. ஆக்கம்: திருமதி ப. இளங்கோ (உடுவில் மகளிர் கல்லூரி) எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (சி/1586)

### றோணியோ

தரமானது, செலவு குறைவானது, உரிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம். [சி-1656]

### O/L கணிதம்

மாணவர்கள் தாமாகவே கற்றலை மேற்கொள்ளச் சிறந்த கணித நூல்கள் ஆசிரியர் சச்சிதானந்தனின் உதவி நூல் வரிசைகளாகும். மடக்கைகள், விருத்திகள், புள்ளி விபரவியல், திரிகோண கணிதம் ஒவ்வொன்றும் ரூ 20/-. பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா மற்றும் புத்தகசாலைகளில். [5066]

### மீண்டும் கிடைக்கிறது

"நொடியும், விடையும் பாகம் II" மீண்டும் வெளிவந்து விட்டது. மார்ச் 31 ஆம் திகதியுடன் போட்டி முடிந்து விடும். ஆயிரம் ரூபா பரிசைப் பெற இப்போதே நொடியும், விடையும் மூன்று பாகங்களையும் வாங்குங்கள். தொகுப்பாசிரியர்: கோப்பாய் சிவம். [20017]

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் வினாக்களுக்கு உரிய பதில் உடனே கிடைக்கும். ஜாதகம், குறிப்பு எழுதிப் பலன் கூறப்படும். கைரேகை, விவாகப் பொருத்தம் சொல்லப்படும். தொடர்பு: த. சிவானந்தன், பிரபல ஜோதிடர் ஆனந்தா ஜோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. [20025]

## அறிவித்தல்

**அன்னை பூபதி ஞாபகார்த்த பொது அறிவுப் போட்டியில்**

மாணவர்கள் கலந்து கொள்ளும் பொருட்டு எதிர் வரும் 14, 15 ஆம் திகதிகளில் [சனி, ஞாயிறு] அனைத்து கல்வி நிறுவனங்களையும் மூடி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**பொதுச் செயலாளர்,**
**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,**
**யாழ். மாவட்டம்.**

[20032]

## இறுதி அறிவித்தல்

**யாழ். மாநகரசபை**

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட வியாபார நிலையங்களுக்கு வியாபார உத்தரவு பெறுவதற்கான இறுதித் திகதி 31 - 3 - 92 வரை நீடிக்கப்படுகிறது. இதற்கு முன் சகல வியாபார உரிமையாளர்களும் உத்தரவுப் பத்திரம் பெற்றுக்கொள்ளுமாறு மீண்டும் வலியுறுத்தப்படுகிறார்கள். தவறுபவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதால் இவ்விடயத்தில் வியாபார உரிமையாளர் புரிந்துணர்வுடன் மாநகரசபை நிர்வாகத்துடன் ஒத்துழைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வே. பொ. பாலசிங்கம்
ஆணையாளர்,
யாழ். மாநகரசபை.

1992-3-9

குறிப்பு: பாதிப்படைந்ததன் காரணமாக வியாபார நிலையங்களை மூடியுள்ளவர்கள் இதுபற்றி குறித்த திகதிக்குள் எமக்கு அறிவிக்க வேண்டும்.

[சி/1600]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் மலர்ந்தது: 02 — 02 — 1921



விண்ணில் கலந்தது: 10 — 02 — 1992

**கபிரியேல் சூசைமுத்து**
(இராசதுரை)
(ஆசாரியார்)

உயிராய் எமைக்காத்தீர் ஒளியில் கலந்து விட்டீர் ஓடியது ஓர்திங்கள் ஓயவில்லை எம் கண்ணீர்.

எங்கள் குடும்பத்தலைவரின் ஆன்ம சாந்திக்காக இன்று (11-03-1992) புதன்கிழமை காலை 7 மணிக்கு யாழ் ஆசனக் கோவிலில் நடைபெறும் பூசைப்பலியில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், வேறு வழிகளில் உதவியவர்களுக்கும் எமது நன்றிகள்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

27, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(4535)

## 15 ஆயிரம் ஜே.வி.பி.யினரை விடுவிக்கக் கோரிக்கை

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 15 ஆயிரம் ஜே.வி.பி.யினரை உடன் விடுதலை செய்வதுடன் அந்த இயக்கத்தின் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் அடக்கு முறையை அரசு நிறுத்த வேண்டும்.

அண்மையில் விடுதலையானவரும் ரோஹண விஜேவீராவின் மைத்துனருமான டாக்டர் கபாஷ் சந்திரா பெர்னாண்டோ 'சண்டே ஒப்சேர்வருக்கு' அளித்த பேட்டி ஒன்றில் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் சொன்னதாவது:

ஜனநாயக நீரோட்டத்தில் மீண்டும் இணைய ஜே.வி.பி. தயாராக உள்ளது.

நாம் ஆயுதங்களைக் கைவிட்டுவிட்டோம். ஜனநாயக நடைமுறையில் பங்கு கொள்ள நாம் விரும்புகின்றோம். எமது ஜனநாயக உரிமைகளை மறுப்பது சட்ட விரோதமான செயலாகும். எமது கட்சி மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டுவிட்டது— என்றார். [ஒ-எ]

## மீண்டும் அரசியலில் ஜே.வி.பி. பிரவேசிப்பதற்கு எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 11

ஜே. வி. பியினர் அதே பெயரில் மீண்டும் ஜனநாயக நடைமுறை அரசியலில் பங்குகொள்வதை பாதுகாப்புப் படையினர் விரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பெயரை வெளியிட விரும்பாத சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி 'சண்டே ஒப்சேவர்' வாரஇதழ் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

ஜே. வி. பியினர் பல படையினரையும் அவர்களது உறவினர்களையும் கொலை செய்துள்ளனர். அவர்கள் மீண்டும் பகிரங்கமாக வெளியே வந்து செயற்பட்டால் இரத்த ஆறு மீண்டும் ஓடும் என்றும் அந்த இராணுவ அதிகாரி எச்சரிக்கை செய்தார் என்று அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

(மற்றும் ஜே. வி. பி. செய்திகள் 5 ஆம் பக்கத்தில்)

## கடவுச்சீட்டு வழங்குவது கம்பியூட்டர் மயமாகும்

கொழும்பு, மார்ச் 11

எதிர்வரும் ஜூன் மாதம் முதல் கடவுச்சீட்டு வழங்கும் வேலைகள் கம்பியூட்டர் மயப்படுத்தப்படவுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

ஒருவர் ஒன்றுக்குமேற்பட்ட கடவுச் சீட்டுகளைப் பெறும் மோசடி உட்பட பல்வேறு மோசடிகளைத் தடுக்கும் நோக்கத்துடன் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டில் மட்டும் 6 லட்சத்து 25 ஆயிரத்து 580 கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. கடவுச்சீட்டு மற்றும் வீஸா மூலம் அரசுக்கு 37 கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளது. (உ-எ)

## தோட்டங்களை வாங்க புலிகள் முயற்சிக்கலாம்

### கொழும்பு எம். பி. எச்சரிக்கிறார்

கொழும்பு, மார்ச். 11

தோட்டங்களை 22 கூறுகளாக்கி வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு விற்பது மூலம் புலிகள் தோட்டங்களை வாங்க வசதி செய்யப்பட்டுள்ளது.

மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த கொழும்பு மாவட்ட எம். பி. திரு. பந்துல குணவர்த்தனா [கடந்த வியாழனன்று நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிதி (திருத்த) சட்டமூலம் மீதான விவாதத்தில் அவர் உரையாற்றினார்.

அவர் மேலும் பேசுகையில்—

அமெரிக்கா தமது நாட்டில் பியர் குடிப்பதற்கு செலவிடும் பணத்திலும் பார்க்க, மிகக் குறைந்த செலவில் இலங்கையில் பங்குகளைச் சொந்தமாக்கிக் கொள்ளலாம்.

அரசாங்கம் தற்போது மேற்கொண்டுள்ள வரி விலக்குகளைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் தோட்டங்களை மட்டுமன்றி கூட்டுத்தாபனங்களையும் வாங்கலாம். இவ்வாறான விடயங்களில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் குறித்துக் கவனிக்க வேண்டும் என்றார்.

நிதி அமைச்சுக்குள் விடுதலைப் புலிகளின் செல்வாக்கு இருக்கிறதா என்பதை தேசிய அபிமானத்துடன் நாம் விசாரித்துப்பார்க்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (இ)

## ஸ்ரீமாவுக்கு 3 மாத லீவு

கொழும்பு, மார்ச். 11

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு கடந்த நான்காம் திகதியில் இருந்து நாடாளுமன்றம் மூன்று மாத கால லீவு வழங்கியுள்ளது.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரிச்சர்ட் பதிரான சமர்ப்பித்த லீவு கோரும் விண்ணப்பத்தை நாடாளுமன்றம் கடந்த வாரம் அனுமதித்தது.

## மூவாண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 24—06—1961

ஆண்டவன் அடியில்: 11—03—1989

அமரர்
**ரதிகுமாரி சுப்பிரமணியம்**
[உபதபாலதிபர், அச்சுவேலி, கைத்தொழில் பேட்டை]


மூவாண்டு சென்றாலும், என்றும் எமது உள்ளத்தில் அணையா தீபமாய் மிளிரும் எம் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திரு. திருமதி சுப்பிரமணியமும்,
திரு. தயாளனும், குடும்பத்தினரும்,
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களும்.

இராசவீதி, தோப்பு,
அச்சுவேலி.

(19988)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**செல்வி சின்னையா புஸ்பராணி**

மண்ணுக்கு: 11—04—1965 ● விண்ணுக்கு 11—02—1992

யாழ். எழுதுமட்டுவாழ் அ. த. க. பாடசாலை ஆசிரியையும், யாழ். பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டதாரி மாணவியும் பண்பு, கலை, பாசத்தின் உறைவிடமாவும், பாசத்தின் தீபமாயும் விளங்கிய எமது செல்வத்தின் மரணச் சடங்கில் கலந்துகொண்ட யாழ். எழுதுமட்டுவாழ் அ. த. க. பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கும், உற்றார், உறவினர், அயலவர், நண்பர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், மலர் வளையம் வைத்தவர்களுக்கும், ஆறுதல் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாளை [12-03-92] எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குபற்றி அவரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்

தனிப்பட்ட அழைப்புகள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகிறோம்.


கோயிலாமனை,
கொடிகாமம்.

பெற்றோர், சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள், பெறாமக்கள்.

[4520]

## ஓராண்டு நினைவஞ்சலி

(11 - 03 - 1992)



**சிவலிங்கம் பிரகாஸ்**

அன்பின் அணைப்பில்: 1972 - 09 - 09

அருந்துயரில்: 1991 - 03 - 11

அணைந்த ஓர் அன்புத் தீபம் — என்றும்
அணையாத எங்கள் பாசதீபம்
மறைந்தது எங்கள் பிரகா(ஸ்) தீபம் — என்றும்
மங்காத எங்கள் குலவிளக்கு.

- குடும்பத்தினர்.

அறிவாலயம்,
இணையாணன்.

[20029]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு மாகாண

## பிரதம செயலாளரின் செயலகம்

### கிராம உத்தியோகத்தர் சேவையின் 11ஆம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான

# போட்டிப் பரீட்சை - 1992

கிராம உத்தியோகத்தர் சேவையின் 11 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விதிகளுக்கு இணங்க, வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு ஆட்களை நியமிக்கும் பொருட்டுப் பரீட்சை ஆணையாளரால் நடத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றும் பொருட்டு, வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளரினால் கீழ்வரும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. பரீட்சை ஆணையாளரால் நடத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையில் தகைமைகளைப் பெறும் விண்ணப்பதாரர்களுக்கிடையில் திறமை அடிப்படையில் தகைமைகளை உடையவர்களை இன விகிதாசாரத்துக்கு இணங்கத் தேர்ந்தெடுத்து, அத்தகைய வெற்றிடங்கள் நிரப்பப்படும். வெற்றிடமொன்றின் பொருட்டு சம தகைமைகளைக் கொண்ட இரண்டு விண்ணப்பதாரர்கள் அல்லது அதற்கு மேலதிகமானோர் இருக்கும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பான இறுதித் தீர்மானத்தை வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எடுப்பார்.

கிராம உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான பரீட்சை மூன்று (03) வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். அவை கீழ் வரும் பாடங்களைக் கொண்டிருக்கும்.

| வினாத்தாள் | நேரம் |
|---|---|
| 1. மொழி ஆற்றல் | 1 மணி |
| 2. பொது அறிவு | 1 மணி |
| 3. விவசாய அறிவு (பாடத்துடன் தொடர்புடையது) | 1 மணி |

பாடத்திட்டம்:

(அ) மொழி ஆற்றல் — பிழையற்ற முறையில் மொழியைக் கையாளும் திறமை. கருத்துக்களை வெளியிடுதல், அவற்றைப் புரிந்து கொள்ளுதல். இத்துறையில் கடிதங்களைப் பரிமாறிக் கொள்ளும் திறமை. முறைப்பாடுகளை அறிக்கைப்படுத்தல் போன்ற விடயங்களை அடக்கிய 01 மணித்தியால வினாத்தாள்.

(ஆ) பொது அறிவு:

தேசிய சர்வதேச விடயங்கள் தொடர்பாக பரீட்சார்த்திகளின் அறிவையும், தேசிய, பொருளாதார, சமூக, வரலாற்று ரீதியிலான கலாச்சாரங்கள் தொடர்பான அறிவை அளிக்கும் பொருட்டான 01 மணித்தியால வினாத்தாள்.

(இ) விவசாய அறிவு:

I — விவசாய கோட்பாடுகளும் — பயிர்ச் செய்கையும்,

II — ★ நெற் பயிர்ச் செய்கை — விதைகளை இனங்காணுதல், ஏற்படும் நோய்கள், நோய்களைத் தடுப்பதற்கான முறைகள், புதிய தொழில் நுட்ப பயிர்ச்செய்கை முறைகள்.

★ மாட்டுப் பண்ணைகள் பால் எடுக்கும் பொருட்டு — பசுக்களை இனங்காணுதல், நோய்களைத் தடுக்கும் முறைகள், பால் இறைச்சி உற்பத்திகளைச் சந்தைப்படுத்தல்.

★ கோழி வளர்ப்பு — கோழி வளர்ப்புக்கு தேவைப்படும். தொழில் நுட்ப அறிவு, உணவுகளைத் தயார் செய்தல், நோய்கள், நோய்களைத் தடுத்தல்.

★ தேனீகள் வளர்ப்பு — தேனீப் பெட்டிகளை தயார் செய்தல், புதிய தொழில் நுட்ப அறிவு.

★ வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை — தகுந்த வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கைகளை இனங்காணுதல் - நீர் வழங்குதல்.

III பயிர்களைப் பல்வகைப்படுத்தல் தொடர்பாக அடிப்படை அறிவுடன் தொடர்புடைய விடயங்கள்.

IV மீன்பிடிக் கைத்தொழில் தொடர்பாக ஆரம்ப செய்முறை அறிவு - மீன்களின் இனப்பெருக்கம், மீன்பிடித்தல், மீன் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பான தொழில் நுட்ப அறிவு.

★ விவசாயத்தின் பொருட்டு உபயோகித்துக் கொள்ளக்கூடிய தாபன முறைகள் தொடர்பாகப் பயிலுதல்.

★ உதவி மானியங்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு எடுக்கவேண்டிய நடவடிக்கை.

பரீட்சை:- மாவட்டத் தலைநகரங்களில் உள்ள நிலையத்தில் மாத்திரமே நடத்தப்படும்.

03. விண்ணப்பிக்கும் பொருட்டு அபேட்சகர்கள் கீழ்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

I வயதெல்லை

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாதவர்களாகவும், 40 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். அரசாங்க நிரந்தர பதவிகளை வகிப்பவர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தாது.

II (அ) கல்வித் தகைமைகளும் மற்றைய தகைமைகளும்

1. சிங்களம், தமிழ்மொழிகள் உட்பட எண்கணிதம், வர்த்தக எண்கணிதம், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியுடன் குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைதல்.

அல்லது

2. சிங்களம் அல்லது தமிழ்மொழி, எண்கணிதம், வர்த்தக எண்கணிதம், ஆரம்ப கணிதம், தூய கணிதம் என்னும் பாடங்களில் சித்திகளுடன் குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணப் பரீட்சையில் சித்தியடைதல்.

அல்லது

3. மொழி, கணிதம் உட்பட குறைந்த பட்சம் 'பி' தரத்தில் இரண்டு சித்திகளுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் தேசிய கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் சித்தியடைதல்.

குறிப்பு: மேல் பந்தி 3 இன் கீழ் க. பொ. த. (சா. த) ஏதேனும் பாடமொன்றின் பொருட்டு சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருக்கையில் க. பொ. த. (உ. த) ரத்தில் அப்பாடங்களின் பொருட்டு சாதாரண சித்தி பெற்றிருந்தால் அத்தகைய பாடங்கள் சாதாரண தரத்தில் திறமைச் சித்திகளாகக் கருதப்படும்.

(ஆ) விண்ணப்பதாரர்கள்:

1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்
2. நல்லொழுக்கம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
3. கிராம உத்தியோகத்தரொருவருக்கான கடமைகளை மேற்கொள்ளக்கூடிய விதத்தில் சிறந்த உடல் நலம் கொண்டவராக விளங்குதல் வேண்டும்.

(இ) 1. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்புள்ள நெருங்கிய 6 ஆண்டுகளுக்குள் அபேட்சகர் தாம் நியமனம் கோரும் பி/ செ/ உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தொடர்ந்து 3 ஆண்டுகள் வசித்து வந்தார் என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு கீழ்வரும் சான்றிதழ்களை நேர்முகப் பரீட்சையின் போது முன்வைத்தல் வேண்டும்.

★ வாக்காளர் பெயர்ப்பட்டியலில் இருந்து பெற்றுக்கொண்ட பொழிப்பு;

★ பி/செயலாளரினால் உறுதிசெய்யப்பட்ட கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட கிராம உத்தியோகத்தர் சான்றிதழொன்று.

2. அபேட்சகர் வெற்றிடமுள்ள நிர்வாக மாவட்டத்தினுள் பிறந்தவராக அல்லது நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருக்கும் பட்சத்தில், பெற்றோர்கள் காலத்துக்குக் காலம் இடமாற்றம் பெற்றுச் செல்வதனால் தமது வதிவிடம் தொடர்பாக தகவல்களை உறுதிப்படுத்த முடியாத இடமாற்றங்களைக் கொண்ட சேவைகளில் உள்ள உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் அபேட்சகர்களாகத் தோற்றும்போது, அப்பிள்ளைகளின் நிரந்தர வதிவிடமாக தாயின் அல்லது தந்தையின் பிறந்த இடத்தை நிரந்தர வதிவிடமாகக் கருதுதல் வேண்டும்.

04. ஆட்சேர்ப்புக்கள் கிராம உத்தியோகத்தர் சேவையின் 11 ஆம் தரத்திற்கே மேற்கொள்ளப்படும்.

I இக்கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களுக்கு உப அட்டவணையின் இல. 1இல் காட்டப்பட்டுள்ள வெற்றிடங்களைக் கொண்டுள்ள பி. செ / உ. அ. அதிபர் பிரிவுகளில் வசிப்பவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

II கிராம உத்தியோகத்தர்களாகத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு எழுத்து மூலம் பரீட்சையின் பெறுபேறுகளுக்கிணங்க, குறிப்பிட்ட பி. செ/ உ. அ. அதிபர் பிரிவுகளில் வதியும் உச்சப் புள்ளிகளைப் பெற்றுள்ள குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டவர்களே தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்ந்தெடுக்கும் பொருட்டு, தகைமையைப் பெறுவதற்கு குறிப்பிட்ட பாடங்களில் 40 புள்ளிகள் வீதம் பெறுதல் வேண்டும்.

05. விண்ணப்பங்கள் அனுப்பும் முறை:

இவ் விண்ணப்பத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கிணங்கத் தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்களை 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத் தபாலில் கீழ்வரும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆணையாளர் / அரசாங்க அதிபரின் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை அச்சிட்டு அல்லது தட்டெழுத்து இயந்திரத்தில் பொறித்து அல்லது கையால் எழுதித் தயார் செய்து முடிந்த போதிலும் இதனைத் தமது கையெழுத்தின் மூலமே பூரணப்படுத்துதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் இடப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கிராம உத்தியோகத்தர் சேவை 11வது தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை — 1992'' எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

முகவரி:- 1. மாவட்ட ஆணையாளர் / அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.
2. மாவட்ட ஆணையாளர் / அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.
3. மாவட்ட ஆணையாளர் / அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு.
4. மாவட்ட ஆணையாளர் / அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், வவுனியா.
5. மாவட்ட ஆணையாளர் / அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், மன்னார்.
6. மாவட்ட ஆணையாளர் / அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், திருகோணமலை.
7. மாவட்ட ஆணையாளர் / அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு.
8. மாவட்ட ஆணையாளர் / அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், அம்பாறை.

விண்ணப்பங்களுடன் காசுக் கட்டளைகள் தவிர்ந்த, எந்தவொரு ஆவணங்களையும் அனுப்புதல் கூடாது என்பதுடன், நேர்முகப் பரீட்சையின்போது முன்னளிப்பதற்கு கீழ்வரும் சான்றிதழ்களைத் தயார்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

1. வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.
2. பிறப்பத்தாட்சிப் பத்திரத்தின் புகைப்படப் பிரதி.
3. கல்விச் சான்றிதழ்களின் புகைப்படப் பிரதி.
4. அண்மையில் பெற்றுள்ள குணநலச் சான்றிதழ்கள் இரண்டு.

06. பரீட்சைக் கட்டணங்கள்:

தபால் அலுவலகத்தில் மாற்றக்கூடிய விதத்தில் வடக்கு - கிழக்கு மாகாண சபைப் பிரதம செயலாளரின் பதவிப் பெயருக்குப் பெற்றுக் கொண்ட காசுக்கட்டளையை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும். அதை விண்ணப்பத்துடன் ஒட்டுதல் கூடாது. ரூபா 75/-க்கான காசுக்கட்டளையை அனுப்புதல் வேண்டும்.

செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் மறுபடி செலுத்தப்படாது என்பதுடன், வேறு பரீட்சைகளுக்கு மாற்றவும் இயலாது.

07. விண்ணப்பங்களைப் பிழையான முறையில், பூரணமற்ற முறையில் தயார் செய்து அனுப்புவதால் ஏற்படும் பாதகமான விளைவுகளுக்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாவார்கள். பூரணமற்ற, முறையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழ்வரும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஆட்பதிவு அடையாள அட்டை.
2. தபால் அதிபரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை.
3. செல்லுபடியான கடவுச் சீட்டு.

எல்லாப் பரீட்சார்த்திகளும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பரீட்சைச் சட்டதிட்டங்களைத் தெரிந்திருத்தல் வேண்டும் அத்துடன் அவற்றைப் பின்பற்றுதல் வேண்டும்.

கிராம உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு, கிடைத்துள்ள விண்ணப்பங்கள் எழுத்து மூலப் பரீட்சைக்கு முன்போ அல்லது பின்போ நிராகரிக்கும் அதிகாரம் வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளருக்கு உரித்தாகும்.

விண்ணப்பதாரர்கள் கையொப்பத்தை பாடசாலை அதிபர், சட்டத்தரணி, சமாதான நீதவான், பிரசித்த நொத்தாரிசு, படைத்தளபதி சேவைகளின் ஆணைபெற்ற உத்தியோகத்தர்கள் பெயரில் பிரிவில் அரசாங்க வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட அதிகாரி அல்லது ஆண்டொன்றுக்கு 25,200/-க்குக் குறையாத இணைந்த சம்பளத்தைப் பெறும் அரசாங்க சேவை நிரந்தர பதவியொன்றை வகிப்பவரால் உறுதி செய்ய முடியும்.

08. பதவிக்கான சம்பள அளவுத் திட்டம்:

வருடாந்தம் 19,680 — 9x480 — 8x600 — 28,800/- ஆகும். ரூபா 25,200/-க்கு முன்னர் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை உண்டு. பயிற்சிக் காலத்தில் மாதம் 250/-க்கான கொடுப்பனவொன்று செலுத்தப்படும்.

09. சேவை நிபந்தனைகள்:

பதவி நிரந்தரமானது, ஓய்வூதியமுடையது. விதவை, அனாதைச் சிறார்கள் நிதியத்துக்கு உதவித் தொகைகள் செலுத்தப்படல் வேண்டும். 03 மாதப் பயிற்சிக் காலத்தைக் கொண்டிருக்கும்.

செ. கணேசநாதன்,
பிரதம செயலாளர்,
வடக்கு - கிழக்கு மாகாணசபை,
பிரதம செயலாளரின் செயலகம்,
திருகோணமலை.

திகதி:- 24-02-1992
திருகோணமலை.

### அட்டவணை இல. 01

வெற்றிடமாகவுள்ள பகுதிச் செயலாளர் / மேலதிக அரசாங்க அதிபர் பிரிவுகளின் பெயர்ப்பட்டியல் மாவட்ட இலக்கத்துடனும், பிரிவு இலக்கத்துடனும்

| மாவட்டம் | மாவட்ட இல. | பிரிவு இல. | | |
|---|---|---|---|---|
| கொழும்பு | 01 | 01 | — | 30 |
| கம்பஹா | 02 | 31 | — | 60 |
| களுத்துறை | 03 | 61 | — | 90 |
| காலி | 04 | 91 | — | 120 |
| மாத்தறை | 05 | 121 | — | 150 |
| ஹம்பாந்தோட்டை | 06 | 151 | — | 180 |
| மொனறாகலை | 07 | 181 | — | 210 |
| பதுளை | 08 | 211 | — | 240 |
| கேகாலை | 09 | 241 | — | 270 |
| இரத்தினபுரி | 10 | 271 | — | 300 |
| மாத்தளை | 11 | 301 | — | 330 |
| கண்டி | 12 | 331 | — | 360 |
| நுவரெலியா | 13 | 361 | — | 390 |
| அநுராதபுரம் | 14 | 391 | — | 420 |
| பொலன்னறுவ | 15 | 421 | — | 450 |
| குருநாகல | 16 | 451 | — | 480 |
| புத்தளம் | 17 | 481 | — | 510 |
| அம்பாறை | 18 | 511 | — | 540 |
| மட்டக்களப்பு | 19 | 541 | — | 570 |
| முல்லைத்தீவு | 20 | 571 | — | 600 |
| மன்னார் | 21 | 601 | — | 630 |
| யாழ்ப்பாணம் | 22 | 631 | — | 660 |
| திருகோணமலை | 23 | 661 | — | 690 |
| கிளிநொச்சி | 24 | 691 | — | 720 |
| வவுனியா | 25 | 721 | — | 750 |

கிராம உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாக உள்ள பிரதேசச் செயலாளர் / உ. அ. அதிபர் பிரிவுகளின் பெயர்ப் பட்டியல் மாவட்ட இலக்கத்துடனும், பிரதேச இலக்கத்துடனும்,

**அம்பாறை மாவட்டம் — இல. 18.**

பிரதேசச் செயலாளர் / உ. அ. அ. பிரிவு — பெயரும் இலக்கமும்.

| | | |
|---|---|---|
| அட்டாளைச்சேனை | — | 511 |
| ஆலையடி வேம்பு | — | 512 |
| [illegible] | — | 513 |

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு - கிழக்கு மாகாண......

[3ஆம் பக்கத் தொடர்ச்சி]

| | |
|---|---|
| அம்பாறை | — 514 |
| தமனை | — 515 |
| கல்முனை (முஸ்லிம்) | — 517 |
| கல்முனை (தமிழ்) | — 518 |
| காரைதீவு | — 519 |
| வகுகல | — 520 |
| நிந்தவூர் | — 522 |
| பொத்துவில் | — 524 |
| திருக்கோவில் | — 526 |
| உகணை | — 527 |

**மட்டக்களப்பு மாவட்டம் — இல. 19.**
பிரதேசச் செயலாளர் / உ. அ. அ. பிரிவு — பெயரும் இலக்கமும்.

| | |
|---|---|
| ஏறாவூர்பற்று | — 541 |
| காத்தான்குடி | — 542 |
| கோறளைப்பற்று | — 543 |
| கோறளைப்பற்று - வடக்கு | — 544 |
| மண்முனை | — 545 |
| மண்முனை - வடக்கு | — 546 |
| மண்முனை தென் எருவில்பற்று | — 547 |
| மண்முனை தென் மேற்கு | — 548 |
| மண்முனை மேற்கு | — 549 |
| போரதிவுப்பற்று | — 550 |

**முல்லைத்தீவு மாவட்டம் — இல. 20.**
பிரதேசச் செயலாளர் / உ. அ. அ. பிரிவு — பெயரும் இலக்கமும்.

| | |
|---|---|
| மாந்தை கிழக்கு [பாண்டியன் குளம்] | — 571 |
| கரைதுறைப்பற்று [முல்லைத்தீவு] | — 572 |
| ஒட்டுசுட்டான் | — 573 |
| புதுக்குடியிருப்பு | — 574 |
| துணுக்காய் | — 575 |

**மன்னார் மாவட்டம் — இல. 21.**
பிரதேச செயலாளர் / உ. அ. அ. பிரிவு - பெயரும் இலக்கமும்

| | |
|---|---|
| மடு | — 601 |
| மன்னார் | — 602 |
| மாந்தை மேற்கு | — 603 |
| முசலி | — 604 |
| நானாட்டான் | — 605 |

**யாழ்ப்பாண மாவட்டம் — இல. 22.**
பிரதேசச் செயலாளர் / உ. அ. அ. பிரிவு - பெயரும் இலக்கமும்.

| | |
|---|---|
| நெடுந்தீவு | — 631 |
| தீவுப்பற்று வடக்கு | — 632 |
| தீவுப்பற்று தெற்கு | — 633 |
| யாழ்ப்பாணம் | — 634 |
| நல்லூர் | — 635 |
| தென்மராட்சி | — 636 |
| வடமராட்சி கிழக்கு | — 637 |
| வடமராட்சி வடக்கு | — 638 |
| வடமராட்சி தெற்கு - மேற்கு | — 639 |
| வலிகாமம் கிழக்கு | — 640 |
| வலிகாமம் வடக்கு | — 641 |
| வலிகாமம் தெற்கு | — 642 |
| வலிகாமம் தென்மேற்கு | — 643 |
| வலிகாமம் மேற்கு | — 644 |

**திருகோணமலை மாவட்டம் — இல. 23.**
பிரதேசச் / செயலாளர் உ. அ. அ. பிரிவு - பெயரும் இலக்கமும்;

| | |
|---|---|
| சச்சிலம்பத்தை [வெருகல்] | — 661 |
| கோமரங்கடவல | — 662 |
| கந்தளாய் | — 663 |
| கிண்ணியா | — 664 |
| குச்சவெளி | — 665 |
| மொறவேவா | — 666 |
| மூதூர் | — 667 |
| பதவிசிறிபுர | — 668 |
| சேருவில | — 669 |
| தம்பலகாமம் | — 670 |
| திருகோணமலை பட்டிணமும் சூழலும் | — 671 |

**கிளிநொச்சி மாவட்டம் — இல. 24.**
பிரதேசச் செயலாளர் / உ. அ. அ. பிரிவு - பெயரும் இலக்கமும்.

| | |
|---|---|
| கரைச்சி | — 691 |
| கண்டாவளை | — 692 |
| பளை | — 693 |
| பூநகரி | — 694 |

**வவுனியா மாவட்டம் — இல. 25.**
பிரதேசச் செயலாளர் / உ. அ. அ. பிரிவு - பெயரும் இலக்கமும்.

| | |
|---|---|
| வவுனியா வடக்கு | — 721 |
| வவுனியா தெற்கு சிங்களப் பிரிவு | — 722 |
| வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு | — 723 |
| வெங்கலச் செட்டிக்குளம் | — 724 |

**விசேட குறிப்பு:**

யாழ்ப்பாண மாவட்ட ஆணையர் / அரசாங்க அதிபரினால் கடந்த ஆண்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களும் தற்சமயம் ஆட்சேர்ப்பு நிபந்தனைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாலும், விண்ணப்ப மாதிரிப் படிவத்தில் மாற்றம் செய்யப் பட்டுள்ளதாலும், புதிய நிபந்தனைகளுக்கமைய, குறிப்பிட்ட திகதிக்குள் மீண்டும் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள். விண்ணப்பக் கட்டணம் புதிதாகச் செலுத்த வேண்டியதில்லை. ஆனால் முன்னர் பணம் செலுத்திய விபரம், விண்ணப்பம் அனுப்பிய பதிவுத் தபால், பற்றுச்சீட்டு விபரம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

1. அளவு ஏ — 4 (21 — 29 சென்றி மீற்றர்)
2. பக்கம் 1 பக்கம் 2

## வடக்கு — கிழக்கு மாகாண சபையின்
## கிராம உத்தியோகத்தர் சேவை பிரிவு - 11 ஆம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான
# போட்டிப் பரீட்சை - 1992

வழங்கப்பட்ட கூட்டினுள் உரிய குறியீட்டு எழுத்தை / இலக்கத்தை இடவும்.

மாவட்டம்................................ மாவட்ட இல: [ ]
விண்ணப்பிக்கும் பிரதேசச் செயலாளர் / உ. அ. அதிபர் பிரிவு: [ ]
................................ பிரிவு இல: [ ]
(தயவு செய்து அட்டவணையைப் பார்க்கவும்)

01. விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களுடன் பெயர்: ................................
ஆங்கிலத்தில்: ................................
முழுப் பெயர்:
ஆங்கிலத்தில் ................................
சிங்களம்/தமிழ்; ................................

02. முகவரி:
ஆங்கிலத்தில்: ................................
சிங்களம் / தமிழ்: ................................

03. பால்: ஆண் — 1 பெண் — 2 [ ]

04. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்: சிங்களம் — S
தமிழ் — T
ஆங்கிலம் — E [ ]
(இதனைப் பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.)

05. நீங்கள் இலங்கை பிரஜையா என்பதை:
பரம்பரையாக — 1
பதிவு செய்வதன் மூலம் — 2 [ ]

06. இனம்:
சிங்களம் — 1 இலங்கைத் தமிழ் — 2
முஸ்லீம் — 3 இந்தியத் தமிழ் — 4
மலாய் — 5 வேறு — 6 [ ]

07. பிறந்த திகதி:
வருடம்: .................... மாதம்: .................... திகதி: ....................

08. பிறந்த இடம்— மாவட்டம்— .................... பிரதேசசெயலாளர் பிரிவு ....................
கிராம உத்தியோகத்தர் பிரிவு ....................

09. விண்ணப்பிக்கும் பகுதிச் செயலாளர் பிரிவில் வசித்த காலம்:
வருடம்: .................... மாதம்: .................... திகதி: ....................

10. க. பொ. த. (சா/த) தே. பொ. க. த. பரீட்சை அல்லது சித்தி பெற்ற பரீட்சைகளின் விவரங்கள்:
பரீட்சையின் பெயர்: ....................
வருடம்; .................... பரீட்சையின் இல: [சுட்டிலக்கம்] ....................

| | பாடங்கள் | தரம் | | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | .................... | .................... | 5. | .................... | .................... |
| 2. | .................... | .................... | 6. | .................... | .................... |
| 3. | .................... | .................... | 7. | .................... | .................... |
| 4. | .................... | .................... | 8. | .................... | .................... |

11. வேறு தகைமைகள்: ....................

12. நீர் எப்போதாவது ஏதேனும் குற்றமொன்றிற்கு நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா:
ஆம் / இல்லை (ஆம் எனின் விவரம் தருக)

13. விண்ணப்பதாரரின் சான்றிதழ்
(அ) இவ்விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் எனக்குத் தெரிந்தவரையில் உண்மையானவையும் சரியானவையும் என கௌரவமாகக் கூறுகின்றேன்.
(ஆ) இவ் விண்ணப்பம் தவிர்ந்த வேறு விண்ணப்பங்கள் ஏதேனும் இப் பரீட்சையின் பொருட்டு என்னால் முன்னளிக்கப்படவில்லையெனவும் நேர்மையாக கூறிக் கொள்கின்றேன். என்னால் கூறப்பட்ட விவரங்கள் பொய்யானது என உறுதிப்படுத்தப்படுமிடத்து நான் சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட முன்பு தகைமையற்றவனாவேன் எனவும் நியமனம் கிடைத்த பின்னர் உண்மை உறுதி செய்யப்பட்டால் சேவையிலிருந்து விலக்குவதற்கு உட்படுவேன் எனவும் நான் அறிவேன்.
(இ) பரீட்சைக் கட்டணம் ரூபா ..................../- செலுத்தப்பட்டுள்ளது.
காசுக்கட்டளை இலக்கம்: ....................
வழங்கிய தபால் அலுவலகம்: ....................
திகதி: ....................
(ஈ) நான் இப்பரீட்சையின் நிபந்தனைகளுக்கு உடன்படுகின்றேன்.

திகதி: .................... ....................
விண்ணப்பதாரின் கையொப்பம்

14. விண்ணப்பதாரர் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.
இவ்விண்ணப்பத்தை முன்னளித்த திரு. / திருமதி: .................... என்பவர் எனக்கு நன்கு பரீட்சயமானவர் எனவும், அவர் 199....................ஆந் திகதி என் முன்னிலையில் தனது கையெழுத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

....................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர்: ....................
பதவி: ....................
முகவரி; ....................
திகதி: ....................
குறிப்பு: பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை கழற்றியெடுக்கக்கூடிய விதத்தில் விண்ணப்பத்துடன் குண்டூசியொன்றினால் இணைக்கவும்.

[சி-1595]

# அறிவித்தல்
## சனசமூக நிலையங்களின் நிர்வாகக் குழுக் கலந்துரையாடல்

எதிர்வரும் 21 ஆம் 22 ஆம் திகதிகளில் (மார்ச்) சனசமூக நிலையங்களின் நிர்வாகக் குழுக்களின் கலந்துரையாடல்கள் எனது தலைமையில் அந்தந்த உப அலுவலகங்களிலும் நகரசபைக் காரியாலயங்களிலும் இடம் பெறும். இதில் பங்குபற்றாத சனசமூக நிலையங்களின் பதிவு இரத்துச் செய்யப்படும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும். கலந்துரையாடல் இடம் பெறும் நேரத்தைச் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களிலிருந்து தவறாது அறிந்து கொள்ளவும்.

ஏற்கனவே கேட்டதற்கிணங்கச் சகல சனசமூக நிலையங்களும் முதலுதவிப் பயிற்சிப் பட்டியலை 16-03-1992 திங்கட்கிழமைக்கு முன்னர் எனது காரியாலயத்தில் தவறாது கையளிக்கவும்.

சுந்தரம் டிவகலாலா,
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்.
10-03-1992.

(சி-1598)

கிரிக்கெட்;

## தருமபுரம் ம.வி அணிக்கு வெற்றி

25 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் தருமபுரம் கோ வித்தியாலயம் விசுவமடு வித்தியாலயத்தை 17 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

விஸ்வமடு வித்தியாலய மதானத்தில் அன்மையில் நடைபெற்ற இப் வபாட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தருமபுரம் ம. வி. அணி 19 . 1 ஓவர்களில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் துடுப்பெடுத்தாடிய விசுவமடு வித்தியாலய அணி 15 3 ஓவர்களில் எல்லா ஆட்டக்காரர்களையும் இழந்து 34 ஓட்டங்களை பெற்றது.

## ஸ்ரீராம கிருஷ்ணர் ஜயந்தி பக்தர்கள் மாநாடு

இடம்: ஸ்ரீசாரதா சேவாச்சிரமம்
காலம்: சனிக்கிழமை (14 — 03 — 1992)
காலை 9 மணி
விடயம்: ஸ்ரீராமகிருஷ்ணர் உலகுக்கு அவதரித்த மூன்று பொக்கிஷங்கள்.
தொடக்க உரை: திரு. செ. ஸ்ரீநிவாசன் [பிரதேச செயலர், வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை]
பஜனை
ஆய்வுரை: சுவாமி சித்ருபானந்தா
[பாடசாலை மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், பக்தர்கள் முன் அனுமதி பெற்றுப் பங்குபற்றலாம்]

[சி-1597]

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
### யாழ். கிளை தலைமையலுவலகம்
# தையல் பயிற்சி ஆசிரியர்

பளை, மருதங்கேணி, ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கான மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் தகைமையும், அனுபவமும் உள்ளோரிடமிருந்து 17-03-1992 வரை எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும். 18-03-1992 (பிற்பகல் 2.00 மணிக்கு) எமது பணிமனையில் நேர்முகப் பரீட்சைக்கும், செய்முறைப் பரீட்சைக்கும் சமுகம் தரவும்.

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
10 - 03 - 1992

[சி/1599]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### புதிய ஆபத்து உருவாகிறது!

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் வாலிபர் ஒருவர் "எய்ட்ஸ்" நோய் காரணமாக நீர்கொழும்பில் காலமானார் என்ற செய்தி கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அந்த இளைஞர் கனடாவில் ஐந்து வருடங்கள் தங்கியிருந்து விட்டு வந்தவர் என்பதும் தகவல்.

யாழ்ப்பாணத்தில் மூன்றாவது எய்ட்ஸ் நோயாளியும் கண்டுபிடிக்கப்பட்டார் என்று சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் தகவல் வெளியாகி இருந்தது.

தமிழ்ப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பலர், தொழிலின் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்று வருகிறார்கள்.

மேலைநாடுகளுக்கு அகதிகளாகச் சென்றவர்கள் சிலர் அந்நாடுகளில் தற்கால வாசகால அனுமதி பெற்றிருக்கிறார்கள். மற்றும் பலர் தொழில் நாடிச் சென்றும் அங்கு வாசகால அனுமதி பெற்றிருக்கிறார்கள். இந்த இருசாராரில் பலரும் இப்போது இந்தியாவுக்கு வந்தும், அல்லது இங்கு வந்தும் திருமணம் செய்கிறார்கள்.

இதைவிட மேலும் அனேகமான சந்தர்ப்பங்களில் மணப்பெண்கள் இங்கிருந்து அனுப்பப்படுகிறார்கள். வெறும் சோதிடப் பொருத்தத்துடனும், பெருந்தொகைப் பணப் பரிமாற்றத்துடனும் மணமகன் யார், மணமகள் யார், அவர்களது பூர்வீகம் என்ன, வைத்திய பரிசோதனை (உடல்) நிலை என்ன என்பன போன்ற விவரம் எதுவும் தெரியாமலே இத்தகைய திருமணங்கள் நடக்கின்றன.

அடுத்து, தமிழகத்தில் இருந்து அகதிகள் வரத் தொடங்கி விட்டார்கள். இந்தியாவில் "எய்ட்ஸ்" தாராளம் என்பது பழைய தகவல்

தமிழகம் சென்ற அகதிகள் போலவே, மேலைநாடுகளில் அகதிகளாகக் காலத்தைக் கடத்தும் தமிழர்களும் இன்னும் சில வருடங்களில் இங்கு வரப்போகிறார்கள்.

இவை அனைத்தையும் ஒரு சேரப் பார்த்தால், தமிழ்ப் பகுதிகளில் "எய்ட்ஸ்" நோய் ஆபத்து பெரும் பரிமாணத்தில் உருவாகும் வாய்ப்புகளும், சந்தர்ப்பங்களும் உண்டு என்பது எவருக்கும் இலகுவில் புலப்படும்

'எய்ட்ஸ்" உலகத்தின் முதலாவது ஆட்கொல்லி நோய். தொழில் நுட்பத்துறையிலும், வைத்திய ஆராய்ச்சித் துறையிலும் முன்னணி வகிக்கும் மேலைத்தேச நாடுகளைக் கூட அந்நோய் ஆட்டம் காணவைத்துள்ளதைப் பார்க்கிறோம்.

"எய்ட்ஸ்" ஆபத்து இங்கு வந்துவிட்டால், பெரிதாக வளர்ந்துவிட்டால், வைத்திய வசதிகளில் நூற்றாண்டுகளுக்கு பின் தள்ளப்பட்ட நிலையில் உள்ள தமிழர் நிலை என்னாகும் என்பதை நினைத்துப் பார்க்கவே மனம் வெதும்புகிறது.

ஏற்கனவே தமிழர் தலைமேல் குவிந்துள்ள நூற்றுக்கணக்கான பிரச்சினைகளுடன் "எய்ட்ஸ்" என்ற புதிய சமூக ஆபத்தும் சேர்ந்து கொண்டால்.......

"எய்ட்ஸ்" தொற்றிக்கொண்டால் குணப்படுத்த முடியாதது. எனவே அது வராமல், பரவாமல் தடுத்துக் கொள்வதே அந்த ஆபத்திலிருந்து மீட்சி பெறுவதற்கு ஒரேயொரு வழி.

உலக சுகாதார நிறுவனமும், ஐ. நா. சங்கமும் இது விடயத்தில் உதவ வந்திருப்பது இடுக்கண் களையக் கூடிய தேவைக்கு ஏற்ற உதவி. தக்கபடி பயன்படுத்த எமது பகுதியில் உள்ள சுகாதார சேவை நிறுவனங்களும் மக்களும் முன் வர வேண்டும் முயற்சியுடன் உழைக்க வேண்டும்.

"எய்ட்ஸ்" பரவாமல் தடுப்பதிலேயே தமிழர்களின் எதிர்காலம் தங்கியுள்ளது என்பதைச் சகலரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

"எய்ட்ஸை" தடுப்பதைத் தொனிப் பொருளாகக் கொண்டு அதன் ஆபத்துகளையும், தடுப்பு முறைகளையும் பரந்த அளவில் மக்களுக்கு கூச்சமின்றி எடுத்துச் சொல்ல வேண்டிய காலம் வந்து விட்டது.

# மலையகத்தில் தமிழ் ராஜதானி; சாத்தியக் கூறுகள் உண்டாம்!

கொழும்பு, மார்ச் 11

இலங்கையிலேயே முதல் தடவையாக மலைநாட்டில் மத்திய மாகாணம், ஊவா மற்றும் சப்ரகமுவா மாகாணங்களின் சில பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 'தமிழ் ராஜதானி' ஒன்று உருவாகுவதற்குரிய பலத்த சாத்தியக் கூறு தென்படுகின்றது.

சுதந்திரக் கட்சி எம். பிக்கள் சிலர் அமைத்துள்ள 'ஹெல உறுமய' அணியின் தலைவரான திரு. திலக் கருணாரத்னா முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:–

மலையகத்தில் என்ன நடைபெறுகின்றது என்பதை மக்களுக்கு நாம் தெரியப்படுத்த வேண்டியுள்ளது.

தமிழரின் படையெடுப்பு அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய இடங்களில் இருந்து தெற்குப் பக்கமாக என்றுமே இடம்பெற்றதில்லை என்பதை சரித்திரத்தைப் பார்த்தால் தெரிய வரும்.

லட்சக்கணக்கான வாக்குகளின் ஆதரவுடன் உள்ள சக்திவாய்ந்த அமைச்சராக தொண்டமான் இருக்கிறார். மலையகத்தில் 'தமிழ் ராஜதானி' அமையும் சாத்தியப்

### 'ஹெல உறுமய' எச்சரிக்கை

பாடு உள்ள பகுதிகளில் இ. தொ. கா. தான் ஆட்சி நடத்துகிறது; ஐக்கிய தேசியக்கட்சி அல்ல.

நுவரெலியாவில் இருந்த உதவி அரச அதிபர் அலுவலகத்தை தொண்டமான் கொட்டகலைக்கு மாற்றி விட்டார். கொட்டகல, தொண்டமானின் கோட்டையாகும். இதனால் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள சிங்களவர் பெரும் சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர். நுவரெலியா மேஜரின் எதிர்ப்பும் தூக்கி எறியப் பட்டுவிட்டது. இணைப்புப் பல்கலைக்கழகக் கல்லூரியும் கொட்டகலையில் அமைக்கப் பட்டுள்ளது. அக் கல்லூரியில் அனுமதி பெற இனவிகிதாசார முறை முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

மலையகத் தமிழ் மாணவரின் வயதெல்லை அதிகரிக்கப்பட்டு, கல்வித் தகைமை எல்லை குறைக்கப்பட்டுள்ளது. இது அக் கல்லூரியில் அனுமதி பெறும் விஷயத்தில் சிங்கள மற்றும் முஸ்லிம் மாணவருக்கு இழைக்கப்பட்ட அநீதி ஆகும்.

தோட்டங்களை தனியார் மயப்படுத்துவதன் மூலம் குறைந்தது 2 லட்சம் தொழிலாளர்கள் வேலை இழப்பர் என்று தெரிந்திருந்தும் அமைச்சர் தொண்டமான் அதனை ஏன் ஆதரிக்கிறார்? இதன் பின்னணியில் பெரிய பயமுறுத்தல் உள்ளது.

வேலையிழக்கும் தோட்டத் தொழிலாளரை மலையகத்தின் ஏனைய பகுதிகளில் குடி அமர்த்தும் திட்டத்துடனா தொண்டமான் தோட்டங்கள் தனியார் மயப்படுத்தும் திட்டத்தை ஆதரிக்கின்றார் என்ற கேள்வி எழுந்திருக்கின்றது.

மலையகத்தில் எஞ்சியுள்ள சிவனொளிபாதமலைப் பிரதேசக் காடுகளை அழிக்கும் நடவடிக்கைகளில் கடந்த பன்னிரண்டு மாதங்களாக தோட்டத் தொழிலாளர் ஈடுபட்டுள்ளனர். மரங்களை வெட்டி, காடுகளுக்கு நெருப்பு வைப்பதில் தோட்டத் தொழிலாளர் ஈடுபட்டுள்ளனர். அழிக்கப்பட்ட காட்டுப் பகுதிகளில் குடியிருப்புகளை தொழிலாளர்கள் அமைக்கப்போகின்றார்கள் என்று நாம் எண்ணுகின்றோம்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் உடரடல்ல பகுதியில் காடுகளை அழித்துக் கொண்டிருந்த தமிழ்த் தோட்டத் தொழிலாளரை வனப் பாதுகாப்பு அதிகாரிகளும் பொலீஸாரும் கைது செய்து பொலீஸ் நிலையத்துக்குக் கூட்டிக்கொண்டு வந்த சமயத்தில்- ஐந்நூறுக்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் திரண்டு சென்று அதிகாரிகளைத் தாக்கி கைதானவர்களை மீட்டு எடுத்துச் சென்றுள்ளனர். இது தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

சிங்களப் பகுதியில் இப்படி ஒரு சம்பவம் இடம்பெறறிருந்தால் என்ன நடந்திருக்கும்? முழுக் கிராம மக்களுமே கைது செய்யப்பட்டிருப்பர். கிராமமே எரிக்கப்பட்டிருக்கும்.

— இப்படி திரு. திலக் கருணாரத்ன சொன்னார். [ஒ-எ]

### 9 பேர் கைது

நுவரெலியா மாவட்டம்-ஹோர்ட்டன் பிளேஸில் காடு தீக்கிரையான சம்பவம் தொடர்பாக ஒன்பது தோட்டத் தொழிலாளர்களை பொலீஸார் கைது செய்தனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ-எ)

# இ.தொ.கா. இனி வரும் தேர்தல்களில் அதன் சின்னத்திலே போட்டியிடும்?

### வருடாந்த மாநாட்டில் விவாதம் நடக்கும்

கொழும்பு, மார்ச் 11

எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல்களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளர்கள், காங்கிரஸ் சின்னத்திலேயே போட்டியிட வேண்டும் என்ற யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 15 ஆம் திகதி நுவரெலியாவில் நடைபெறவிருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வருடாந்த மாநாட்டில் இந்த யோசனை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது.

வருடாந்த மாநாட்டிற்கு அமைச்சரும் காங்கிரஸ் தலைவருமான திரு. எஸ். தொண்டமான் தலைமை வகிக்க இருக்கின்றார்.

புதிய யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டால் அது நாட்டின் அரசியலில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என்று அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலையகத்தின் சில பகுதிகளில் வேறு சில அரசியல் கட்சிகளிலும் பார்க்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு எண்ணிக்கை ரீதியில் பலம் அதிகமாக இருப்பதாகவும் —

அப்படி இருந்தும் கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி "டிக்கட்டில்" போட்டியிட்ட இ.தொ.கா. வேட்பாளர்கள் அந்த எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசனங்களைப் பெறவில்லை என்றும் புதிய யோசனையைச் சமர்ப்பித்தவர்களின் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-எ)

### பெகின் காலமானார்

இஸ்ரவேலின் முன்னாள் பிரதமர் பெகின் காலமானார்.

எகிப்துக்கும் இஸ்ரவேலுக்கும் இடையிலான பிரச்சினையைத் தீர்த்து வைத்த காம்ப் டேவிற் ஒப்பந்தத்துக்காக பெகினுக்கும் அப்போதைய எகிப்திய ஜனாதிபதி அன்வர் சாதாத்துக்கும் சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ)

### சிங்கள மொழி வளர்வதற்கு தமிழ் பேருதவி புரிந்துள்ளது

#### தமிழ் இலக்கிய விழாவில் பேச்சு

கொழும்பு, மார்ச் 11

பொலநறுவ ஆட்சிக்காலம் முதல் தமிழ், சிங்கள மொழியின் வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்துள்ளது. கோட்டே அரசு காலத்தில் தமிழ் அக்கறையுடன் வளர்க்கப்பட்டு வந்துள்ளது. ஒன்றுடன் ஒன்று இணைந்து வாழ்ந்த தமிழ், சிங்கள இனங்கள் வெள்ளையர் ஆட்சியின் போது காரணங்களுக்காகப் பிரித்து வைக்கப்பட்டன. அதன் பலாபலனையே இன்று நாம் அனுபவித்து வருகின்றோம்.

சிங்களப் பிரமுகர்கள் ஒழுங்கு செய்த தமிழ் இலக்கிய விழாவில் கலந்து கொண்டு பேசும் போது வணக்கத்துக்குரிய பிரக்ஞானவத்த தேரர் இவ்வாறு கூறினார். கொழும்பு பொது நூல் நிலைய மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இவ் விழா நடத்தப்பட்டது.

அங்கு மேலும் அவர் கூறியதாவது:

தமிழர் சிங்களவரைப் பிரித்து வைப்பதில் சில அரசியல்வாதிகளுக்கு நல்ல வசதிகளும் வாய்ப்புகளும் கிடைத்துள்ளன. பிரிவில் இன்பம் கண்டு அரசியல் வாதிகள் இருக்க, சாதாரண பொது மக்களே அடிபட்டுச் சாகின்றனர் என்றார்.

கோலமிட்டு, வாழை தோரணம் கட்டி, பூரண கும்பம் வைத்து, நாதஸ்வர இசையுடன் இவ்விழா ஆரம்பமானது. பேராசிரியர் சுனில் ஆரியரத்தினா சிங்களத்தில் எழுதிய தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ் சிங்கள சிற்றிலக்கிய அகராதி ஆகிய நூல்கள் விழாவில் வெளியிடப்பட்டன.

சிங்கள பிரமுகர்கள் பலரும் சந்தன, குங்குமப் பொட்டுகளுடனும், வேட்டியுடனும் விழாவில் கலந்து கொண்டனர். (த-எ)

### "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" 1995 முதல் இயங்கும்

இலங்கையில் நிறுவப்பட இருக்கும் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா வானொலி ஒலிபரப்புச் சேவைகள் 1995 முதல் இயங்க ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வானொலி அஞ்சல் நிலைய நிர்மாண வேலைகள் இந்த ஆண்டின் இறுதியில் ஆரம்பமாகும் என்று கொழும்பில் உள்ள வொய்ஸ் ஒவ் அமெரிக்கா அலுவலகப் பேச்சாளர் தெரிவித்தார்.

புத்தளம், இரணவில பகுதியில் 413 ஏக்கர் காணியில் அமையவிருக்கும் இந்த அஞ்சல் நிலையத்தின் ஒலிபரப்புகள் கிழக்கு ஆபிரிக்கா, சீனா உட்பட பல பகுதிகளை சென்றடையக் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆறு கோடி அமெரிக்க டொலர் செலவில் இந்த நிலையம் அமைக்கப்பட இருக்கின்றது. (த-எ)

### 2 ஆயிரம் ஆண்டளவில்

## மக்கள் எண்ணிக்கை 630 கோடியை எட்டும்!

1990 இல் உலக மக்கள் எண்ணிக்கை 530 கோடி (5.3 பில்லியன்) யாகப் பெருகியது. 2 ஆயிரம் ஆண்டில் அது 630 கோடியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அதிகரிப்பில் சுமார் 93 சதவீதம் வளரும் நாடுகளில் ஏற்படும்.

உலகில் 8 கோடி உயிரினங்கள் வாழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 1 கோடியே 24 லட்சம் உயிரினங்கள் இனங்கண்டு விவரிக்கப்பட்டுள்ளன; 25 சதவீதம் உயிரினங்கள் எதிர் வரும் 20 முதல் 30 ஆண்டுகளில் அழியும் நிலையில் இருக்கின்றன.

ஆசியாவில் தற்பொழுதுள்ள வெப்ப வலயக் காடுகள் அழிக்கப்படும் வேகத்தைப் பார்த்தால் இன்னும் 40 ஆண்டுகள் தான் அவை நின்று பிடிக்கும். ஆபிரிக்கக் காடுகள் 85 ஆண்டுகளும் லத்தீன், அமெரிக்கக் காடுகள் 156 ஆண்டுகளும் நின்று பிடிக்கும். (ஒ-க)

# செக். நாட்டு டாங்கிகளும் யுத்தமுனைக்கு வருமாம்!

### பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, மார்ச் 11

செக்கோஸ்லேவேகியாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டதும் மீளத்திருத்தியமைக்கப்பட்டதுமான யுத்த டாங்கிகள் அடுத்த சில வாரங்களில் போர் முனையில் பரீட்சித்துப் பார்க்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'சண்டே ரைம்ஸ்' இத் தகவலை வெளியிட்டிருக்கிறது.

கடந்த ஆண்டில் செக். நாட்டில் இருந்து 25 டாங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டன. அவற்றில் நான்கு இந்த ஆண்டின் முற்பகுதியில் பழுதடைந்து போயின. அவற்றைத் திருத்துவதற்குத் தேவையான உதிரிப்பாகங்களைப் பெற்றுக் கொள்வதில் இராணுவத்தினருக்குக் கஷ்டங்களும் ஏற்பட்டன. இதனால் செக். நாட்டு டாங்கிகளை என்ன செய்வது என்ற பிரச்சினையும் ஏற்பட்டது. இறுதியாக அவற்றைப் போர் முனையில் பரீட்சித்துப் பார்ப்பது என முடிவு செய்யப்பட்டிருக்கின்றது

உத்தேச யாழ். குடா தாக்குதலின் போது 18 புதிய சீனரக இலகு கன டாங்கிகளுடன் செக். டாங்கிகளையும் பயன்படுத்த இராணுவம் எண்ணியிருப்பதாக, 'சண்டே ரைம்ஸ்' செய்தியில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. செக். டாங்கி ஒன்றின் பெறுமதி 32 லட்சம் ரூபா (80 ஆயிரம் அமெ. டொலர்) ஆகும்.

ஐரோப்பாவில் உள்ள வார்ஸோ படையினருக்கு ஏற்றதாக வடிவமைக்கப்பட்ட இந்த டாங்கிகள் இலங்கையின் தரை மற்றும் சூழலுக்கு தகுந்ததாக இருக்காமல் போகலாம் என்ற கவலையும் சில இராணுவ நிபுணர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம்—

இதுவரை காலமும் சலாடின், சிரசென் ரக கவச வாகனங்களுடன் செயற்பட்ட படையினருக்கு இந்த டாங்கிகள் அதிக பலத்தை வழங்கும் என்று இராணுவ பகுப்பாய்வாளர்கள் கூறுகின்றனர். [ஒ-எ]

### உடுகம்பொல கட்டாய ஓய்வு:

## பொலீஸ் மா அதிபருக்கு ஜே. வி. பி. பாராட்டு!

கொழும்பு, மார்ச் 11

பிரதி பொலீஸ் மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொல கட்டாய ஓய்வில் அனுப்பியதற்காக ஜே.வி.பி இயக்கம் பொலீஸ் மா அதிபரைப் பாராட்டியுள்ளது.

லண்டனில் வெளியான 'நவயுகய' பிரசுரத்தில் சோமவன்ஸ அமரசிங்க கையெழுத்திட்ட அறிக்கை ஒன்றில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி பொதுச் செயலாளர் அமரவன்ஸ என்று அந்தச் சஞ்சிகையில் கூறப்பட்டுள்ளது.

உடுகம்பொல செய்த ஆயிரக்கணக்கான கொலைகளுக்கு முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா, அவரது மகன் ரவி ஜெயவர்த்தனா, முன்னாள் அமைச்சர்கள் அத்துலத்முதலி, காமினி திஸநாயக்கா ஆகியோரே பொறுப்பு என்றும் —

அச்சமயம் மௌனமாக இருந்த ஜனாதிபதி பிரேமதாஸா, அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவும் அக் கொலைகளுக்குப் பொறுப்பு என்றும் 'நவயுகய' அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் அத்துலத் முதலி உடுகம்பொலவுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருக்கிறார் என்றும் —

முன்னணி ஆட்சி அமைக்கும் பட்சத்தில் பாதுகாப்பு அமைச்சராக உடுகம்பொல நியமிக்கப்படுவார் என்று உடுகம்பொலவுக்கு லலித் — காமினி குழு உறுதியளித்திருப்பதாகவும் அந்த சஞ்சிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

### தேர்தல் ஆணையாளருக்கு கடிதம்:

## ஜே. வி. பி. இயங்குவதற்கு பொலீஸார் முட்டுக்கட்டை

### சோமவன்ஸ குற்றம் சாட்டுகிறார்

கொழும்பு, மார்ச் 11

ஜே. வி. பி. ஜனநாயக அமைப்பாக இயங்குவதற்கு பொலீஸாரின் அடக்குமுறை முட்டுக்கட்டையாக இருக்கிறது.

ஜே. வி. பி. தலைவரான சோமவன்ஸ அமரசிங்க, தேர்தல் ஆணையாளருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இவ்வாறு குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஜே. வி. பி. ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக இருந்தும், அது சுதந்திரமாக செயற்படுவதற்கு அரசு அடக்குமுறை அனுமதியளிப்பதாக இல்லை என்றும், இது ஜனநாயக உரிமையை மீறுவதாக அமைந்துள்ளது என்றும் சோமவன்ஸ அமரசிங்க தமது கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

இதே சமயம்—

அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியின் பொதுச் செயலாளர் எழுதும் கடிதத்தையே தேர்தல் ஆணையாளரால் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள முடியும் என்று அரசியல் சட்ட நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

ரோஹண விஜேவீர 1989 இல் மரணமான பின்னர், ஜே. வி. பியின் தலைவராக சோமவன்ஸ அமரசிங்கா அறிவிக்கப்பட்டார் என்பதும் பின்னர் அமரசிங்க இந்தியாவுக்கு முதலில் தப்பிச் சென்று, அங்கிருந்து லண்டன் சென்றார் என்று அறிவிக்கப்பட்டதும் தெரிந்தவையே. (ஒ-எ)

### ஆனையிறவுச் சண்டையில் ஈடுபட்ட

## ராணுவ கவச அணி மேஜர் மனைவியுடன் விபத்தில் பலி

கொழும்பு, மார்ச் 11

இலங்கை இராணுவ கவச அணியைச் சேர்ந்த மேஜர் ஷிரான் ஜினசேனாவும் அவரது மனைவி பெலிஷியாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை வெலிசறையில் இடம்பெற்ற கார் விபத்து ஒன்றில் உயிரிழந்தனர்.

மேஜர் ஜினசேனா அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மனைவி பெலிஷியா மருத்துவமனையில் மரணமானார். அவர்கள் பயணம் செய்த கார், பஸ் ஒன்றுடன் மோதியது.

கடந்த ஆண்டு ஆனையிறவு இராணுவ முகாமை விடுதலைப்புலிகளின் தாக்குதலில் இருந்து மீட்க நடத்தப்பட்ட 'பலவேகய ஒப்பரேஷனி'ன் போது இராணுவ கவச அணிக்குத் தலைமை வகித்து நடத்திச் சென்றவர் மேஜர் ஜினசேனா என்று தெரிவிக்கப்படுகிறது

வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற பல இராணுவ நடவடிக்கைகளில் மேஜர் ஜினசேனா முக்கிய பங்கு வகித்தார் என்றும் கூறப்பட்டது. [ஒ-எ]

### மட்டு. ஊர்காவலருக்கு சில புதிய கட்டுப்பாடுகள்

கொழும்பு, மார்ச் 11

மட்டக்களப்பில் கடமையாற்றும் ஊர்காவல் படையினர் மீது சில கட்டுப்பாடுகளை மட்டக்களப்பு பொலீஸ் அத்தியட்சகர் பிறப்பித்துள்ளார்.

மட்டக்களப்பு கச்சேரியில் நடந்த கூட்டத்தில் இந்த கட்டுப்பாடுகள் குறித்து தெரிவிக்கப்பட்டது.

அரச அதிபர் திரு. மௌனகுரு தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் பொலீஸ் அத்தியட்சகர் புதிய கட்டுப்பாடுகள் குறித்து தெரிவித்ததாவது:–

★ ஊர்காவல் படையினருக்கு தன்னியக்க துப்பாக்கி வழங்கப்பட்டிருந்தால், அவை மீளப் பெறப்படவேண்டும்.

★ ஏறாவூரில் அவர்கள் எந்த வாகனங்களையும் சோதனையிடக் கூடாது.

★ ஏறாவூர் தமிழ் பிரிவு, ஆறுமுகத்தான் குடியிருப்பு எல்லைகளில் உள்ள சென்றிகளில் அவர்கள் பின் நிலைக்கு தள்ளப்படுவர்.

★ இவை ஏறாவூர் பொலீஸ் அதிகாரி மூலம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும். (ஒ-3)

### கர்நாடகத்தில் 9 பேர் மரணம்

புதுடில்லி, மார்ச் 11

கர்நாடக மாநிலம் பெங்களூரில் சட்டவிரோத மது அருந்திய 9 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்தனர். (இ-10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய விடுதலை — பெண் விடுதலை இணைந்து பெறப்பட வேண்டும்

## கிளிநொச்சிக் கூட்டத்தில் ஜெயா

கிளிநொச்சி, மார்ச் 11

எமது தேசிய விடுதலையுடன் பெண்கள் விடுதலையும் இணைத்துப் பெறப்பட வேண்டும்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா மேற்கண்டவாறு கூறினார்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய விளையாட்டரங்கில் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் செல்வி ரதி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

செல்வி ஜெயா அங்கு தொடர்ந்து பேசுகையில், இன்று தமிழீழப் பெண்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள புதிய கருத்துக்கள் நம்பிக்கைகள், எழுச்சிகளுக்கு காரணர் எமது தலைவர் பிரபாகரனே. ஆண்களும் பெண்களும் இணைந்து போராடித்தான் எமது தேசிய விடுதலையைப் பெறமுடியும். மகளிர் படையுடன் தமிழீழப் பெண்கள் விரைந்து இணைந்துகொண்டால் எமது தேசிய விடுதலை விரைவில் கிடைக்கும் என்றார்.

பாதிக்கப்பட்ட பெண்களின் புனர்வாழ்வுப் பொறுப்பாளர் செல்வி மாலினி மற்றும் மாவட்டங்களில் இருந்து கலந்துகொண்ட பெண் பிரதிநிதிகள் உட்பட பலர் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர்.

கூட்ட முடிவில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

மகளிர் தினப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் எழுச்சி ஊர்வலம் ஒன்று இரணைமடுச்சந்தியில் இருந்து ஆரம்பமாகி கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தை வந்தடைந்தது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, மணலாறு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மகளிர்கள் ஊர்வலத்தில் பெருமளவு கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தில் பெண்கள் அடக்குமுறை அடிமைத்தனம் ஆகியவற்றுக்கு எதிராகக் கோஷங்கள் எழுப்பப்பட்டன. [இ-76]

# தீவுப்பகுதியில் சிக்குண்டவர்களுக்கு கடிதம் அனுப்புவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 11

தீவுப்பகுதியில் சிக்குண்ட தமது உறவினர்களுடன், இங்குள்ளவர்கள் கடித மூலம் தொடர்பு கொள்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

மாதத்தில் இரண்டு தடவைகள் இதற்கென விசேட அஞ்சல் சேவைகளை நடத்துவதற்கு யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் பகுதி, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அனுசரணையுடன் ஏற்பாடுகளைச் செய்துள்ளது. கடிதங்கள் முதல் முறையாக இம்மாதம் 15 ஆம் திகதி எடுத்துச் செல்லப்படும்.

தீவுப்பகுதியில் உள்ள தமது கடிதங்களை அனுப்ப விரும்புவோர், அவற்றைத் திறந்த கடிதங்களாக தபாற் பெட்டிகளில் இடவேண்டும் என்றும், செ. ச. சர்வதேசக் குழு நேரில் அவற்றைப் பெற்றுக் கொள்ளமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டது.

காரைநகரில் தங்கியுள்ளோருடன் கடித மூலம் தொடர்பு கொள்ள விரும்புவோர் அவர்களின் முழு விலாசத்தின் கீழ் "அஞ்சல் பெட்டி எண் - 6" அனுராதபுரம் என்று எழுத வேண்டும்.

ஊர்காவற்றுறையில் சிக்குண்டிருப்போருக்கு கடிதம் எழுத விரும்பும் உறவினர்கள் அவர்களின் முழு விலாசத்தின் கீழ் "அஞ்சல் பெட்டி எண் - 7" அனுராதபுரம் என்று எழுத வேண்டும்.

நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு, நெடுந்தீவு ஆகிய நான்கு தீவுகளிலும் தங்கியிருப்போருக்கு கடிதம் அனுப்பும் உறவினர்கள் வழமை போல் முழு விலாசத்தையும் எழுதினால் போதுமானது.

தபாற் பெட்டிகளில் சேகரிக்கப்படும் இக்கடிதங்கள் அஞ்சலதிபர்களால் யாழ். பிரதம அஞ்சலகத்துக்கு அனுப்பப்பட்டு, பிரதம அஞ்சலகத்தால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டு நேரடியாக தீவகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும்—

அனுராதபுரத்துக்கு இவை அனுப்பப்படமாட்டா என்றும் — மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் திரு. ச. சடாட்சரநாதன் தெரிவித்தார். [அ-3]

# முத்தமிழ் விழாவிற்கான ஏற்பாடுகள் துரிதம்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் இம்முறையும் முத்தமிழ் விழாவை கோலாகலமாக நடத்த துரித ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

விழாவை சென்ற வருடத்தை விட மிகச் சிறப்பாகவும், எழுச்சியாகவும் கொண்டாடுவதற்கு, விழாக் குழுக்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தொடர்ந்து தமிழீழத்தின் பல பாகங்களிலும் பத்து நாட்கள் இடம்பெறவிருக்கும் இவ்விழாவில் பட்டிமன்றங்கள், கவியரங்குகள், நடன நிகழ்வுகள், நாட்டிய நாடகங்கள், வில்லுப்பாட்டு, தமிழர்களின் பாரம்பரிய கூத்து வடிவங்கள், நாடகங்கள் என பல சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

முத்தமிழ் விழாவில் பங்கேற்கவிரும்பும் கலைஞர்கள் தங்கள் ஆக்கங்களின் எழுத்துப் பிரதிகளை 30. 03. 92 க்கு முன்பதாக விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்துக்கு அனுப்பிவைக்கலாம் என அறிவிக்கப்பட்டது. (ஓ-த)

# மேற்கிந்திய அணியிடம் இந்தியா தோல்வி கண்டது

## தென்னாபிரிக்காவுக்கு மற்றொரு வெற்றி

உலக கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டித் தொடரில் மேற்கிந்திய அணி இந்திய அணியை 5 விக்கட்டுக்களினால் தோற்கடித்தது.

இந்திய அணி 49.4 ஓவர்களில் 197 ஓட்டங்கள் எடுத்தது. மேற்கிந்திய அணி 40.3 ஓவர்களில் 5 விக்கட்டுக்கள் இழப்புக்கு 195 ஓட்டங்கள் எடுத்தது.

இந்தியாவின் மொத்த 197 ஓட்டங்களின் எண்ணிக்கை மழைக்குப் பின்னர் 46 ஓவர்களில் பெறப்பட்ட ஆகக்கூடுதலான ஓட்டங்களின் அடிப்படையில் 194 ஆக திருத்தப்பட்டது.

இன்னொரு போட்டியில் தென் ஆபிரிக்க அணி ஸிம்பாப்வே அணியை 7 விக்கட்டுகளால் தோற்கடித்தது. ஸிம்பாப்வே அணி 48.3 ஓவர்களில் 163 ஓட்டங்களையும் தென் ஆபிரிக்க அணி 45.1 ஓவரில் 3 விக்கட்டுகள் இழப்புக்கு 164 ஓட்டங்களையும் எடுத்தன. [ஓ-எ]

# நாடுகள் பெற்ற புள்ளிகள்

மெல்போர்ன், மார்ச் 11

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கு கொள்ளும் ஒன்பது நாட்டு அணிகளும் இதுவரை பங்குபற்றிய ஆட்டங்கள் மற்றும் வெற்றி, தோல்வி, அதன் மூலம் பெற்ற புள்ளிகள் ஆகியவை பற்றிய விவரங்கள் வருமாறு:-

| நாடுகள் | ஆட்டம் | வெற்றி | தோல்வி | சமம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | 5 | 5 | — | — | 10 |
| இங்கிலாந்து | 5 | 4 | — | 1 | 9 |
| தென்னாபிரிக்கா | 6 | 4 | 2 | — | 8 |
| ஸ்ரீலங்கா | 6 | 2 | 3 | 1 | 5 |
| இந்தியா | 6 | 2 | 3 | 1 | 5 |
| மேற்கிந்தியா | 6 | 3 | 3 | — | 6 |
| அவுஸ்திரேலியா | 5 | 2 | 3 | — | 4 |
| பாகிஸ்தான் | 5 | 1 | 3 | 1 | 3 |
| ஸிம்பாப்வே | 6 | — | 6 | — | — |

# சந்திரிகாவுக்கு புதிய பதவி

கொழும்பு, மார்ச் 11

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அத்தனகலைத் தொகுதி அமைப்பாளராக சந்திரிக்கா குமாரணதுங்க நியமிக்கப்பட்டுள்ளார். இது பற்றிய உத்தியோகபூர்வ கடிதம் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவால் கட்சியின் சகல கிளைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், சந்திரிக்கா குமாரணதுங்க சுதந்திரக் கட்சியின் மகளிர் முன்னணித் தலைவியாக கட்சியின் மத்திய குழுவால் நியமிக்கப்பட்டுள்ளதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. [உ-10]

இப்பத்திரிகை நியூ [illegible] பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் [illegible] அச்சகத்தில் 11 3 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், மார்ச் 11

வேலணை கல்விக் கோட்ட கணித, விஞ்ஞான ஆசிரியர் மன்றம் ஏற்பாடு செய்துள்ள கல்விக் கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 2-15 மணிக்கு யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறும்.

"கணிதமும் பயன்பாடும்" என்ற பொருள் பற்றி யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. எஸ். ஸ்ரீ சற்குணராஜாவும் "மனிதனும் சூழலியலும்" என்ற பொருளில் யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. வி. குகதாசனும் உரை நிகழ்த்துவர். [இ-10]

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 11

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பணிமனையில் இன்று பிற்பகல் 4 மணிக்கு திரு. க. சொக்கலிங்கம் "எனது ஆசிரிய அதிபர் - எழுத்துலக அனுபவம்" என்னும் பொருள் பற்றிக் கருத்துரை வழங்கவுள்ளார். [ஓ]

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ். பல்கலைக்கழக சமூக, விஞ்ஞான மன்றத்தினரால், நடத்தப்படும் கருத்தரங்குத் தொடர் — 3 இன்று பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலை அரங்கில் நடைபெறும்.

"ஜப்பானிய சமூக பண்பாட்டமைப்பு" என்ற தலைப்பில் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் உரை நிகழ்த்துவார்.

## அகதி..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மக்களுக்கு என அமைத்துக் கொடுக்கப்பட்ட கொட்டகைகளே எரிந்து நாசமாகின.

வளலாய் சல்லியை சேர்ந்த கந்தையா சின்னன் [வயது 75] என்ற வயோதிப மாதுவே உயிரிழந்தவராவார். இரத்தினம் இராசமணி [வயது 53], கதிரிப்பாயைச் சேர்ந்த தம்பிராசா விஜயஸ்ரீ [வயது 24]. தனபாலசிங்கம் தங்கரத்தினம் [வயது 40] ஆகிய மூவருமே காயமடைந்தனர். இவர்கள் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மீண்டும் நிர்க்கதியான அகதிகள் ஆவரங்கால் விஷ்ணு வித்தியாலயத்தில் நேற்று தங்க வைக்கப்பட்டனர். (உ-15)

## குற்றப்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கருதுவதாக சென்னைப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனினதும், பொட்டம்மானினதும் பெயர்களை ராஜீவ் கொலைச் சம்பவத்துடன் சேர்த்து பிரசித்தப்படுத்தி அறிவிப்புகளை விடுத்த பின்னர் —

இப்போது அவர்களின் பெயர்களை ராஜீவ் கொலை வழக்குத் தொடர்பாக குற்றப் பத்திரத்தில் சேர்க்காமல் விடுவது இந்திய புலனாய்வுத் துறைக்குப் பெரும் இழுக்கைத் தேடித்தரும் என்று கூறப்படுகிறது.

அதேசமயம் —

இருவரினதும் பெயர்களை குற்றப் பத்திரத்தில் சேர்த்து, அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிராகரித்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் நிலை ஏற்பட்டால் அதுவும் இந்தியாவுக்கு அவப் பெயரையே ஏற்படுத்துவதாக முடியும் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனால் என்ன செய்வது என்று தெரியாத குழப்பநிலை இந்திய புலனாய்வு வட்டாரங்களில் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் ராஜீவ் கொலை தொடர்பாக ஏப்ரல் மாத இறுதியில் தனி நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்றும் —

எனினும் சட்டரீதியாக அதனை ஜூன் மாதத்துக்குள் தான் தாக்கல் செய்ய முடியும் என்றும் — சிறப்புப் புலனாய்வு [illegible] கார்த்திகேயன் தெரிவித்துள்ளார். [இ]

## ஈழப்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துக்காக, அரசியல் எதிரிகள் மீது "தடா" சட்டத்தைப் பயன்படுத்துவது வன்மையாக கண்டிக்கப்பட வேண்டும்.

"தடா" சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட திராவிட கழக, மற்றும் தி. மு. க. உறுப்பினர்களையும் பிற அமைப்புக்களைச் சேர்ந்தவற்களையும் உடன் விடுவிக்க வேண்டும்.

— இப்படி அவர் [illegible] வற்புறுத்தினார். [உ-த]

# வவுனியா கொக்குவெளியில் சிங்களமக்கள் குடியேற்றம்!

## பாதுகாப்புக்கு கொப்பேகடுவ உத்தரவாதம்

கொழும்பு, மார்ச் 11

வவுனியா கொக்குவெளியில் சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றும் நடவடிக்கை கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக அங்கு 25 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன.

இது தொடர்பான வைபவத்தில் வடபகுதி இராணுவத் தளபதி டென்சில் கொப்பேகடுவவும் கலந்துகொண்டார்.

அங்கு அவர் உரை நிகழ்த்துகையில் —

அப்பகுதியில் குடியேறுவோருக்கு இராணுவப் பாதுகாப்பும் உதவிகளும் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

1985 ஆம் ஆண்டு வன்செயல்கள் காரணமாக, அங்கிருந்து வெளியேறியவர்களே மீண்டும் குடியேற்றப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. [இ]

## முகாமையாளர் கூட்டம்

யாழ். மாவட்ட பல நோ. கூ. சங்க தலைவர்கள் மற்றும் பொது முகாமையாளர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும். [த]

## தடை விதிப்பு

கொழும்பு. மார்ச். 11

திருகோணமலை - அனுராதபுரம் வீதி மீண்டும் பொதுமக்களின் போக்குவரத்துப் பாவனைக்குத் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

மொறவேவாவில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 19 விமானப்படையினர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து — கடந்த மாதம் 21 ஆம் திகதி முதல் — இவ்வீதி போக்குவரத்துக்கு பாவிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. (உ-எ)

## புலிகளுடன்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனிமேல் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யும் பொழுது இப்பொழுதுள்ள நிபந்தனைகள் தளர்த்தப்படும்.

ஈழப் பிரச்சினை இந்த அளவிறகுப் பெரிதாகும் என்று முதலில் யாரும் கணிக்கவில்லை. ஈழ விடுதலைக்காக பல இயக்கங்கள் செயற்பட்டாலும் உண்மையான குறிக்கோள்களோடு செயற்படுபவர்கள் விடுதலைப் புலிகள் தான்.

மற்ற இயக்கங்கள் ஏனோ தானோ என்று தான் செயற்படுகின்றன. அதனால் தான் பெரும்பான்மையான மக்களின் பேராதரவைப் பெற்ற இயக்கமாக விடுதலைப் புலிகள் இயக்கம் விளங்குகிறது.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுக்குச் சென்னை தனி நீதிமன்றம் "பிடி வாரண்ட்" பிறப்பித்துள்ளது. அவரை எளிதில் பிடிக்கமுடியாது.

திரு. பிரபாகரனைப் பிடிப்பதற்கு இலங்கை - இந்திய கூட்டுக் "கொமாண்டோ" இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளும் எண்ணம் எதுவும் இலங்கைக்கு இல்லை.

பிரபாகரனைப் பிடிக்கும் முயற்சியில் முன்னர் இலங்கையும் சரி, இந்தியாவும் சரி தமது விரல்களைச் சுட்டுக் கொண்டுள்ளன.

சென்னை நீதிமன்ற விசேட உத்தரவு தொடர்பாக இந்தியாவுடன் இலங்கை ஒத்துழைக்கிறது. அதற்காக இலங்கை அரசு புலிகளுடன் பேசமாட்டாது என்று அர்த்தமல்ல.

அமைச்சர் தொண்டமான் சமர்ப்பித்த யோசனையில் உள்ள வடக்கு - கிழக்கு நிரந்தர இணைப்பு என்ற அம்சம் அதனை மேற்கொண்டு எடுத்துச் செல்லத் தடையாக உள்ளது. நாட்டின் கரையோரத்தில் மூன்றில் ஒரு பகுதியைத் தமிழீழத்திற்கு வழங்க முடியாது என்பதே சிங்களப் பெரும்பான்மையினரின் பிரதிபலிப்பாக உள்ளது.

இந்தியர்கள் ஈழத் தமிழர் பிரச்சினையை நோக்கும் போது, கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் அம்சங்களை மறந்துவிடுகிறார்கள்.—என்று அவர் மேலும் கூறினார். [அ]

## கையில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தற்காக ஹொனேக்கரைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி ஜேர்மன் ரஷ்யாவை வற்புறுத்தி வருகின்றது.

நாடு கடத்தப்படுவதைத் தவிர்ப்பதற்காக ஹொனேக்கர் மாஸ்கோவில் உள்ள சிலி தூதரகத்தில் தஞ்சமடைந்திருந்தார். தற்போது அவர் வைத்திய சிகிச்சைக்காக மாஸ்கோ மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [உ-எ]

## ரயில் சேவை நேர மாற்றம்

கொழும்பு, மார்ச் 11

கொழும்பு - வவுனியா ரயில் சேவைகளில் நேரமாற்றம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திங்கள்முதல் அமுலுக்கு வந்த புதிய நேரப்படி, யாழ்தேவி கொழும்பு கோட்டையில் இருந்து காலை 5.45 க்கு புறப்பட்டு வவுனியாவை பகல் 11.45க்கு அடையும்.

இரவு தபால் ரயில் கோட்டையில் இரவு 11 மணிக்கு புறப்பட்டு வவுனியாவை காலை 5 30க்கு அடையும்.

வவுனியாவில் இருந்து இரவு ரயில் 10 மணிக்கு புறப்பட்டு அதிகாலை 4.20 க்கு கொழும்பை அடையும். (ஓ-3)

# கழுகு தரையிறங்கிவிட்டது! யானை நடுங்குகின்றது!!

## லலித் கூறும் அரசியல் கதை

கொழும்பு, மார்ச் 11

கழுகு தரையிறங்கிவிட்டது. அதனால் யானை நடுங்குகின்றது. ஆனால் கழுகுக்கு ஆத்திரமூட்டப்படாதவரை அது யானையைத் தாக்காது.

புதிய கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பிரசாரக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி முன்கண்டவாறு கூறினார்.

புதிய கட்சியை தேர்தல் ஆணையாளர் அங்கீகரித்த பின்னர் முன்னணி நடத்திய முதலாவது கூட்டத்தில் திரு. அத்துலத் முதலி பேசினார். அக்கூட்டம் ஹோமகமவில் இடம்பெற்றது.

முன்னணியின் தேர்தல் சின்னமான கழுகு-சுதந்திரம், அச்சமின்மை மற்றும் மக்களை வழிநடத்தல் ஆகியவற்றை பிரதிபலிப்பதாகவும் திரு. அத்துலத் முதலி கூறினார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வரும் பட்சத்தில் ஜனாதிபதிக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட அரசியல் குற்றப் பிரேரணையில் கூறப்பட்ட விற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். [ஓ-எ]

## ஒஷி தப்பினார்

கொழும்பு, மார்ச் 11

மேற்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்த திரு. ஒஸி அபய குணசேகராவை அகற்ற எடுக்கப்பட்ட முயற்சி தோல்வி அடைந்தது.

மாகாண சபையின் கூட்டம் நேற்று நடந்த போது, திரு. அபய குணசேகராவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட பிரேரணையை சபைத் தலைவர் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் நிராகரித்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## பரவுகிறது

வடமராட்சி கிழக்கு பகுதியில் காய்ச்சல் பரவி வருகிறது.

பெரும்பாலானவர்கள் மலேரியாவினாலேயே பாதிக்கப்பட்டுள்ளனர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பரமேஸ்வரி சுப்பிரமணியம்

இலகடி, காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் திரு. அருணாசலம் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவி திருமதி பரமேஸ்வரி சுப்பிரமணியம் காலமானார். இவர் ஜெகதீஸ்வரி, ஜெகதீஸ்வரன், கலாவள்ளி, பரமேஸ்வரன், அருளேஸ்வரன், சர்வேஸ்வரன், சுப்புலக்சுமி, அனுஷியா ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலசுப்பிரமணியம், றோகினி, சங்கரப்பிள்ளை, அன்பரசி, நாகலக்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும், தாட்சாயினி, தில்லைநாயகி, ஆறுமுகம், ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 08-03-1992 ஞாயிறு காரைநகரில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
சகோதரன் க. ஆறுமுகம்
[ஓய்வுபெற்ற நீர்பாசனப் பொறியியலாளர்]

"சடாவதனம்"
சுதுமலை, தெற்கு
மானிப்பாய்.

[20043]

## திரு. வினாசித்தம்பி நடராசா

தெல்லிப்பழை பன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொம்பனித் தெரு, கமலா ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான வினாசித்தம்பி நடராசா 9-3-92 ஆம் திகதி காலமானார்.

அன்னார் காலம்சென்ற திருமதி செல்வநாயகியின் அன்புக் கணவரும், காலம்சென்றவர்களான கணபதிப்பிள்ளை [மலேசியா], சரவணமுத்து [கமலா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்], திருமதி தெய்வானைப்பிள்ளை, திருமதி வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலயோகேஸ்வரி, தனபாலன் [Project Manager, C.E.B. கொழும்பு], சிவபாலன் [அவுஸ்திரேலியா], பாலசிவனேஸ்வரி [ஆசிரியை, யா / சன்மார்க்க மகா வித்தியாலயம்] ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா [விரிவுரையாளர், யா / தொழில் நுட்பக் கல்லூரி], ஜெயகுமாரி, ஸ்ரீராகினி, மனோகரன் [ஆசிரியர், யா / மத்திய கல்லூரி] ஆகியோரின் மாமனாரும், வயிரவப்பிள்ளை, திருநாவுக்கரசு மற்றும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து, கந்தையா ஆகியோரின் மைத்துனரும், முகுந்தன், வைகுந்தன், நிதர்சினி, கலாயன், இலட்சியா, மகிழ்யா, நளின், வாகினிப்பிரியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11-3-1992 ஆம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கேணிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ந. நடராசா [மருமகன்]

"பால கிரி",
பன்னாலை, தெல்லிப்பழை.

(20042)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org